15வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 Fax 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 பாலம் 02 சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 15, 2005



02 வருமான வரியைக் குறைத்துக் கட்ட



04 மரணத்தின் வாயிலில் இருந்தவர்கள் உயிர் பிழைத்த அதிசயம்



சுனாமியின் வரவால் அல்லல் பட்ட மக்களுக்கு தை மகளின் வரவால் வழிபிறக்கட்டும் என்று எங்கள் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்

- விளம்பரம் பப்ளிக்கேசன்ஸ்

# இலங்கை அரசின் தடையை கனடியப் பிரதமர் மதிப்பாரா?

கடல் கோளினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுப்பிரதேசங்களை பார்வையிடவென்று தென் கிழக்கு ஆசியாவுக்குப் பயணமாகும் நமது கனேடியப் பிரதமர், இலங்கைத் தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்குக்கு செல்வாரா? என்பது தொடர்பான கேள்வி இன்று கனேடிய அரசியல் சூழலில் பரபரப்பாக எழுந்துள்ளது.

கணிசமான அளவில் கனடாவில் இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இலங்கையின் யுத்தத்தையும் மிக நீண்டகாலமாக கனடா அவதானித்தே வருகின்றது. இந்நிலையில் அண்மையில் ஏற்பட்ட கடல் கோளினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளைப் பார்வையிட, மனிதாபிமான முறையில் செல்கின்ற கனேடியப் பிரதமர் போல் மாட்டினை இலங்கை அரசு, இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிக்கு செல்ல அனுமதி மறுத்துவிட்டது என்று செய்தி வெளியாகியுள்ளது.

கனேடியப் பிரதமரின் இந்தப் பயணம் குறித்த செய்தி வெளியாகிய-தில் இருந்தே, தாம் புலம் பெயர்ந்து வந்த தாய் நிலப்பகுதிகளுக்கும், தமது பிரதமர் விஜயம் செய்வார் என்றே கனேடியத் தமிழர்கள் நம்பி இருந்தனர்.

இலங்கையின் தடையை அரசியல் ரீதியாக வெற்றி கொள்வதற்கான முயற்சிகளை போல் மாட்டின் முன்னெடுப்பாரா? அல்லது இலங்கை அரசுக்கு செவிசாய்ப்பாரா என்பது சில தினங்களில் தெரிந்து விடும். இதே போல ஐ.நா செயலாளர் கோபி அனன், பேரழிவுகளை சந்தித்த, இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு செல்ல ஆசைப்பட்ட போதும் அவருக்கு இலங்கை தடை போட்டுவிட்டது. 'மனிதாபிமான அடிப்படையில் வந்துள்ள நான், பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களுக்கும் செல்லவே விரும்பினேன். ஆனால் இலங்கை அரசின் விருந்தினரான என்னை அவர்கள் வடக்கு,



கிழக்குக்கு செல்ல அனுமதிக்க வில்லை' என்று கோபி அனன் தெரிவித்துள்ளார். மிகப் பெரிய பேரழிவின் பின்னரும் கூட இலங்கை அரசு மனம் திருந்தவில்லை. அரசியல் காய் நகர்த்தல் வேலைகளிலேயே ஈடுபட்டுள்ளது.

# கனடாவின் பேரழிவு நிவாரண உதவிக்குழு

## (Canadian Military's Disater Assistance Response Team - DART)

*காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது - குறள்*

தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி சிறிதளவாக இருந்தாலும் அதை உலகத்தைவிடப் பெரிதாக மதிக்கும் பண்பு எங்களுடையது. கடல் கோளால் ஏற்பட்ட அழிவிற்கு நிவாரணமாக 425 மில்லியன் கனேடிய டொலரை உதவியாக கொடுத்த கனேடிய அரசாங்கத்தையும் 150 மில்லியன் கனேடிய டொலரை உதவியாகக் கொடுத்த கனேடியப் பொதுமக்களையும் நன்றியுடன் நினைவுகூரும் இத்தருணத்தில் கனடாவின் "பேரழிவு நிவாரண உதவிக்" குழுவைப் பற்றி ஆராய்வதே எமது நோக்கமாகும். இப்பேரழிவு நிவாரண உதவிக்குழு கனேடிய பாதுகாப்பு அமைச்சின் கிங்ஸ்ரன் இராணுவமுகாமில் (CFB Kingston) தனது தலைமையகத்தை கொண்டுள்ளது. இதில் கிஸ்ஸ்ரன் (CFB Kingston) பெரவாவா (CFB Petawawa) மற்றும் ரென்ரன் (CFB Trenton) ஆகிய இராணுவ முகாங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 200 இராணுவவீரர்கள் இருக்கிறார்கள். இவர்களை வழிநடத்தும் கட்டளைத் தளபதியாக (Commanding Officer) லெப்ரினன் கேணல் மைக் வோத் (Lt.Col. Mike Vothe) இருக்கிறார்.

1996 ஆம் ஆண்டு கனேடிய பாதுகாப்பு அமைச்சால் DART உருவாக்கப்பட்டது. அதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் ருவண்டா (Ruanda) நாட்டில் பெரிவாரியாக பரவிய வாந்திபேதி (Cholera Epidemic) நோயை உடனடியாக கட்டுப்படுத்த மேற்குலக நாடுகள் தவறியதால் பல ஆயிரக்கணக்கான உயிரிழப்புக்கள் ஏற்பட்டது. உலகில் இப்படியான பேரழிவு ஏற்படும்போது உடனடியாக நிவாரண உதவி வழங்குவதற்காகவே கனேடிய பாதுகாப்பு அமைச்சால் இப்பேரழிவு நிவாரண உதவிக்குழு (DART) அமைக்கப்பட்டது.

தொடர்ச்சி 08ம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$45.00/ Month
- Up to 700 Min Free
- Evenings & Weekends Free
- 2 Year contract
••• Offer Ends without notice •••
Family plan $40.00/ M/2 phones
•100 Min Daytime to share /Weekend Free
- Upgradable for Free Evening with more Min 2500 Min Free
- between 2 phones V/M, C/W, C/C Free
- Buy one phone as low as $49.99 & 2nd Free
••• 2 year contract
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# வருமான வரியைக் குறைத்துக்கட்ட முடியுமா? 3

**பெரி. முத்துராமன்**



இதற்கு முன் இதழ்களில் பார்த்ததில் சில அடிப்படை விபரங்களை நினைவு கூர்ந்து மேலே தொடர்வோம். வரித்திட்டமிடல் என்பது வருடம் முழுவதும் செய்ய வேண்டிய செயல். அவ்வாறு செய்ததின் பலனை ஏப்ரல் மாதம் அறுவடை செய்யலாம்.

மூன்று இனங்கள் முக்கியமாக வரியைக் குறைக்கின்றன.

1. வரியே இல்லாத வருமானம்: உதாரணம் - வாகன விபத்துப்பணம், கனடா குழந்தை வரிச்சலுகை முதலியன.
2. கழிவுகள் (Deductions)
3. வரவுகள் (Credit)

கழிவுகள், வருமானம் கூட உள்ளவர்களுக்கு வரியைக் குறையச் செய்கின்றன. திரும்பப் பெற முடியாத வரவுகள், வரியைப் பூச்சியமாகக் குறைக்க உதவலாம். ஆனால் பண வரவை அல்லது அரசாங்கக் காசோலையைப் பெற்றுத் தராது.

வரித்திட்டமிடலில் மார்ஜினல் ரக்ஸ் ரேட் (Marginal Tax Rate) முக்கிய பங்கு வகிக்கின்றது. மார்ஜினல் ரக்ஸ் ரேட் 38 சதவீதம் என்றால் உங்களுக்கு வருமானமாகக் கிடைக்கும் ஒவ்வொரு டொலர் கழிவிலும் நீங்கள் 38 சதவீதத்தைச் சேமிக்கிறீர்கள் என்று பொருள்.

வரிகளைக் குறைக்க மிகவும் பயன்படும் உபாயம் கழிவுகள் மற்றும் வரிகளை முடிந்த வரை அதிகப்படுத்தி வரிக்குள்ளாகும் வருமானத்தைக் குறைப்பதே ஆகும்.

அதற்கு நாம் ஏற்கெனவே பார்த்த ஒரு உபாயம். வேலைக்கு இருந்தாலும் சொந்தத்தில் முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ சொந்தத்தொழில் ஒன்றைச் செய்து வருவது ஆகும். சொந்தத் தொழிலில் வரும் நட்டத்தையும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு சம்பள வருமானத்திலிருந்தும் குறைத்துக் கொள்ள முடியும். சொந்தத் தொழில் செய்யும் போது, குறிப்பாக வீட்டிலிருந்து சொந்தத் தொழில் செய்யும் போது பல வீட்டுச் செலவுகளில் ஒருபகுதியை வியாபாரச் செலவு களாகக் காட்ட இயலும். உதாரணத்துக்குப் பின்வருவனவற்றை சொல்லலாம். வீட்டு வாடகை, வீட்டு இன்சூரன்ஸ், மின்சார, தண்ணீர் செலவுகள் முதலியன.

வருமானத்தை விட கூட வரும் செலவுதான் நட்டம். முன்பெல்லாம் நட்டத்தை அனுமதிக்க, ரெவின்யூ கனடா - CRA ஒரே ஒரு கேள்வியைத் தான் கேட்டது. அந்தக் கேள்வி "வரி கட்டுபவர் செய்யும் தொழில், நியாயமாகப் பார்த்தால் இலாபந்தரக்கூடியதா? இந்தக் கேள்வியின் அடிப்படையில் சொந்தத் தொழில் செய்து நட்டத்தை அடைந்த பலருக்கு நியாயமான பலன்கள் மறுக்கப்பட்டன. இந்நிலை 2002இல் ஆண்டின் கனடிய சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பினால் மாறத் துவங்கியுள்ளது. அந்தத் தீர்ப்பு "வரி செலுத்துபவரின் வியாபார நுட்ப அறிவு (அல்லது அறிவின்மை) தொழில் வரும் நட்டத்தைத் தீர்மானிக்கும் ஒரேஒரு காரணியாக இருக்கக்கூடாது. பல காரணிகள் அதுவும் ஒன்றாகக் கருதப்படலாம்." தீர்ப்பாகக் கருதப்படுகின்றது.

இப்போது RRSP என்று சொல்லப்படும் பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய சேமிப்புதிட்டம் (Registered Retirement Savings program) எவ்வளவு வரியைக்குறைக்கப் பயன்படும் கழிவாக (Deduction) உள்ளது என்று பார்ப்போம்.

இந்த ஆர் ஆர் எஸ் பியைப் பற்றி மக்கள் அதிமாகக் கேள்விப்படுவதும், பேசுவதும் பெப்ரவரி மாதம்தான். ஏனென்றால் அப்போதுதான் அந்த ஆர் ஆர் எஸ் பிக்குப் பணம் செலுத்த வருடாந்திர கடைசித் தேதி வருகின்றது. உண்மையாகப் பார்த்தால் ஓய்வூதிய சேமிப்புக்கும், ஓய்வு பெறுதலுக்கும் பெரிய சம்மந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. வரி செலுத்துவதைத் தாமதிக்கவும், குறைக்கவும் பயன் படுத்தபடும். ஆயுதமாகவே தெரிகின்றது. இந்த ஆர் ஆர் எஸ்பி ஐ, வங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், ரஸ்ட் (Trust) கம்பெனிகள், மியுச்சுவல் பண்ட்ஸ் (Mutual Funds), மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலமாகச் சேமிக்கலாம். நீங்கள் செலுத்தும் ஆர். ஆர். எஸ். பி நேரடியாக உங்கள் வருமானத்திலிருந்து குறைக்கப்படுகிறது. அவ்வாறு குறைந்தபின் வரும் வருமானத்துக்கே வரி கணக்கிடப்படுகின்றது. ஆர். ஆர். எஸ். பி பொதுவாக எந்த வருடம் கட்டப்படுகின்றதோ, அந்த வருடம் வரி குறைகின்றது. மேலும் ஆர்.ஆர்.எஸ்.பி சேமிப்பு வரி இல்லாமல் வளர்கின்றது. எந்த வருடம் ஆர்.ஆர்.எஸ்.பி திரும்பப் பெறப்படுகின்றதோ அந்த வருடம் வருமானத்துடன் சேர்க்கப்பட்டு வரி அதிகரிக்கின்றது. பொதுவாக ஓய்வு பெற்ற பின் வருமானம் குறைய இருக்கும் என்று கருதப்படுவதால், அத்தகைய சமயத்தில் இந்த ஆர்.ஆர்.எஸ்.பி ஐ திரும்பப் பெற்றால் வரி அநேகமாக இல்லாமலோ, குறையவோ இருக்கக் கூடும்.

வரி செலுத்துவதைத் தள்ளிப் போட மிகவும் உதவுவது ஆர்.ஆர்.எஸ்.பி யே. முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால் ஆர்.ஆர்.எஸ்.பி எந்த வருடம் திரும்பப் பெறப்படுகின்றதோ, அந்த வருடம் அது வரிக்குள்ளாகின்றதே என்பதே ஆகும். ஆதலால் ஆர்.ஆர்.எஸ்.பி ஐத் திரும்பப் பெறுமுன் நல்ல வரி ஆலோசகரிடம் ஆலோசனை பெறுதல் நலம். ஆர்.ஆர்.எஸ்.பி திரும்பப் பெறப்பட்டதற்கு அடையாளமாக T4 ஆர்.ஆர்.எஸ்.பி தரப்படுகின்றது.

நான் எவ்வளவு தொகையை ஆர்.ஆர்.எஸ்.பி யில் செலுத்தலாம் என்று கேட்கலாம். எளிமையாகப் பதில் சொல்வதானால் சென்ற ஆண்டு நீங்கள் சம்பாதித்த வருமானத்தில் 18சதவீதம் வரை ஆர்.ஆர்.எஸ்.பியில் செலுத்தலாம் என்று சொல்லலாம். வரி

## செய்யும் தொழிலில் வெற்றி பெற

**பெரும்பாலும், எவ்வளவு ஆர்.ஆர்.எஸ்.பி யில் கட்டலாம் என்பதற்கு நீங்கள் கணக்கு எதுவும் போடத்தேவையில்லை. இந்த வருடத்து 2004 க்கு நீங்கள் எவ்வளவு ஆர்.ஆர்.எஸ்.பியில் செலுத்தலாம் என்பது 2003ஆம் வருடத்துக்கான கனடா ரெவின்யூ ஏஜன்ஸியின் (CRA) வரி விதிப்பு நோட்டீஸ் (Notice of Assessment) ஐம் பார்த்தாலே தெரியும்.**

செலுத்துபவர் வேலை செய்யும் இடத்தின் மூலமாக பென்சன் அல்லது ஓய்வூதியத்துக்கு சேமித்தால், அந்தத்தொகை, 18சதவீத ஆர்.ஆர்.எஸ்.பி தொகைக் கணக்கீட்டில் கவனத்தில் கொள்ளப்பட்டு சரி செய்யப்படுகின்றது.

பெரும்பாலும், எவ்வளவு ஆர்.ஆர்.எஸ்.பி யில் கட்டலாம் என்பதற்கு நீங்கள் கணக்கு எதுவும் போடத்தேவையில்லை. இந்த வருடத்து 2004 க்கு நீங்கள் எவ்வளவு ஆர்.ஆர்.எஸ்.பியில் செலுத்தலாம் என்பது 2003ஆம் வருடத்துக்கான கனடா ரெவின்யூ ஏஜன்ஸியின் (CRA) வரி விதிப்பு நோட்டீஸ் (Notice of Assessment) ஐம் பார்த்தாலே தெரியும்.

சரி, உங்கள் கைவசம் வரிவிதிப்பு நோட்டீஸ் இல்லையென்றால், தொலைபேசி எண் 1-800-267-6999 தொடர்பு கொண்டால், அவர்கள் நீங்கள் எவ்வளவு தொகையை ஆர்.ஆர்.எஸ்.பி யில் கட்டலாம் என்ற விவரத்தைக் கூறுவார்கள்.

முந்தைய ஆண்டு வருமானத்தில் 18சதவீதம் வரை ஆர்.ஆர்.எஸ்.பி யில் கட்டலாம் என்று பார்த்தோம். எனவே வரி கட்ட வேண்டிய அளவு வருமானம் இல்லை என்றாலும், வருமானவரிப் படிவத்தை ஆண்டுதோறும் உரியதேதியில், CRA க்குச் சமர்ப்பித்தல், எதிர்காலத்தில் ஆர்.ஆர்.எஸ்.பி மூலம் வரியைக் குறைத்துக் கொள்ள வழி கொடுக்கின்றது. பள்ளிக்கூடம் மற்றும் பலகலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்கள் ஏதோ வருமானத்தைச் சம்பாதிக்கிறார்கள். ஆனால் வரி செலுத்தக்கூடிய அளவுக்கு வருமானம் இல்லை என்று வைத்துக் கொள்வோம். அத்தகையவர் களும் வருமான வரி படிவத்தைச் சமர்ப்பித்தல், அவர்களுக்கு எதிர்காலத்தில் வருமான வரியை ஆர்.ஆர்.எஸ்.பி யின் மூலம் குறைக்க உதவும். இதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவோம்.

ரவி பதினாறு வயதாக இருக்கும்போது பகுதிநேர வேலை ஒன்றைச் செய்ய ஆரம்பிக்கிறார். ஆண்டு தோறும் சம்பாதித்த தொகை $4,000. இந்த வருமானத்துக்கு வரிப்படிவம் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றாலும் அவர் வரிப்படிவத்தை CRA க்கு ஆண்டு தோறும் அனுப்பி வருகிறார். இதன் காரணமாக 22வயதில் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் சமயம் அவருக்கு ஆர்.ஆர்.எஸ்.பி யில் செலுத்தக்கூடிய தொகையாக $4,000 க்கு மேல் இருக்கும். கணக்கு இதுதான். 6 வருடங்களில் சம்பாதித்த தொகை 4,000 X 6 =24,000. இதில் 18சதவீதம் $4320. இந்தத் தொகையை வரிக்கட்ட வேண்டிவரும் வருடங்களில் ஆர்.ஆர்.எஸ்.பி யில் செலுத்தி அந்த ஆண்டுக்கான வரியைக் குறைத்துக் கொள்ளலாம். ரவி வரிப்படிவத்தை 16 வயதிலிருந்து பகுதி நேர வேலைக்குச் சமர்ப்பிக்காமல் இருந்திருந்தால் இந்த ஆர்.ஆர்.எஸ்.பி வாய்ப்பு கிடைத்திருக்காது, இல்லையா?

ஆர்.ஆர்.எஸ்.பி யில் பணம் செலுத்தினால் எந்த வருடத்து வரியைக் குறைக்கப் பயன்படுத்தலாம் என்பது அடுத்த கேள்வி. அதற்கான பதில் இதோ

1. எந்த ஆண்டில் ஆர்.ஆர்.எஸ்.பி செலுத்தப்பட்டதோ அந்த ஆண்டுக்குப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

2. வருடம் முடிந்த 60 தினங்களுக்குள் (மார்ச் 1க்கு முதல்) செலுத்தப்பட்டிருந்தால் முந்தைய ஆண்டுக்குப்பயன்படுத்திக் கொள்ளலாம். உதாரணத்துக்கு ஒருவர் 2005 பெப்ரவரி 28இல் ஆர்.ஆர்.எஸ்.பி யில் பணம் கட்டுகிறார் என்றால் இந்தத் தொகையை வருடம் 2005க்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். வருடம் 2004க்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு நல்ல வரி ஆலோசகர் உங்களுக்குத் தகுந்த ஆலோசனையைக் கூறலாம்.

3. ஆர்.ஆர்.எஸ்.பி யில் செலுத்திய தொகையை பின்வரும் எந்த வருடத்துக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலே குறிப்பிடப்பட்ட உதாரணத்தையே எடுத்துக் கொள்வோம். 2005 பெப்ரவரி 28இல் செலுத்திய ஆர்.ஆர்.எஸ்.பி தொகையை வருடம் 2006 க்கோ அல்லது அதற்குப் பிறகு வருடங்களுக்கோ கூடப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆர்.ஆர்.எஸ்.பி யைப் பற்றிய சில அடிப்படைத் தகவல்களையும், சில சிறப்புத் தகவல்களையும் அடுத்த இதழில் பார்ப்போம். இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ள தொலைபேசி எண் - 416-430-0623

• • •



வரித்திட்டமிடல், நிதி ஆலோசனைகள், கணக்கியல் மற்றும் வருமான வரிச் சேவை களுக்கு பெரி. முத்துராமன்
Successbizsolution அழ. முத்துராமன் 416-430-0623


**விளம்பரம்**
VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059, FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# ஒரு பிரதமரின் கதை முடிந்தது



கொஞ்சம் நாட்கள் முந்தி All India Institute of Medical Sciences- ல் சுவாசக் கோளாறின் காரணமாக சேர்க்கப்பட்டிருந்த முன்னாள் (1991-1996) இந்தியப்பிரதமர் பி.வி. நரசிம்ம ராவ், உடல் நிலை மோசமாகி 22.12.2004 அன்று காலை 2.30க்கு காலமாகினார்.

காலமானபோது அவருடைய வயது 83. அவருடைய பூத உடல் விமானம் மூலமாக ஹைதராபாத் எடுத்துச் செல்லப்பட்டு நிஜாம் சாகர் அருகே பூரண அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. இந்திய பிரதமருக்கு மேலான அதிகாரபீடமாகக் கருதப்படும் சோனியாகாந்தியும், பிரதமர் மன் மோகன் சிங்கும் இறுதிச் சடங்கில் பங்கு கொள்ள ஹைதராபாத் சென்றனர்.

**வெங்கட் சாமிநாதன்**

சோனியா காந்தி 'இனி வரும் தலைமுறைகள் தேசிய தளத்திலும் அதற்கு முன் ஆந்திராவிலும் அவர் செய்துள்ள சேவைகளை மறக்காது. நாம் ஒரு மூத்த தலைவரை இழந்து விட்டோம்' என்றார்.

பதவிக்கு ஆசைப்படாதவர், தனக்கு எக்காலத்திலும் போட்டியாக உருவாக மாட்டார், தனக்கென்று காங்கிரசில் பின்பற்றுவோர் இல்லாதவர், தனக்கென்று குழு ஏதும் உருவாக்கிக்கொள்ளாத தனியர், எனவே தன் சொல் மீறமாட்டார் என்ற நம்பிக்கை பிறந்த பிறகு, சோனியாவின் ஆசீர்வாதத்தில் நியமனம் பெற்ற, அதிகாரபூர்வமான பிரதம மந்திரியான, மன் மோகன் சிங், வெகு வருடங்களுக்குப் பிறகு, வாய் திறந்தும், மனம் திறந்தும் பேசினார். தன்னை உருவாக்கிய, இந்திய மத்திய அரசியல் அரங்குக்கு தன்னைக் கொண்டுவந்து, நிதி அமைச்சர் ஆக்கி, எல்லா எதிர்ப்புகளையும் மீறி தனக்குப் பக்கபலமாக இருந்தவருக்கு கூறும் சந்தர்ப்பம் தன் ஆசானின் மரணத்திற்குப் பிறகுதான் அவருக்குக் கிடைத்துள்ளது.

'தந்தைக்குச் சமமானவரை இழந்து நிற்பதாகவும், தனக்கு வழிகாட்டியாக இருந்தவர், ஆலோசனைகள் கூறியவர் மறைந்து விட்டார்.' என்று மன் மோகன் சிங் தன் இழப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

காலத்தின் கோலம். இன்றைய அரசியல் கலாசாரத்தின் கோலம்.

எல்லோருக்கும் வேண்டாதவராக தூக்கி எறியப்பட்டவரைப் பற்றி, சந்தர்ப்ப வசத்தால், வேறு வழியின்றி பிரதமர் பதவியில் அமர்த்தப்பட்ட ராவ் சாதித்ததைப்பற்றி, மனிதர் மறைந்த பிறகு, அவருடைய மாட்சிமை பற்றி பேசலாம் என்று பத்திரிகைகளும் காத்திருந்தன போல. அரசியல் வாதிகளுக்குத்தான் நன்றி வேண்டாத சங்கதி. பத்திரிகைகளுக்கு என்ன? அவர்கள் தான் தம்மை மக்களின் கருத்துக்களை உருவாக்குகின்ற சக்திகளாக தம்மை பிரகடனப் படுத்திக் கொள்பவை ஆயிற்றே. பத்திரிகை சுதந்திரமும், கருத்து சுதந்திரமும் அரசியல் நிர்ணய சட்டத்தில் அடிப்படை உரிமைகளாக பொறிக்கப் பட்டுள்ளனவே.

காலமும் விதியும் செய்யும் மாயங்களைப்பற்றி ஏதும் முன் கூட்டி தர்க்கம் செய்வதோ, ஆருடம் பார்த்து அறிவதோ இயலாது. ஆந்திர பிரதேசத்தின் முதல் அமைச்சராக (1971-73) இருந்த நரசிம்ம ராவை, இந்திரா காந்தி தில்லி மத்திய அரசுக்கு அழைக்கும் வரை, அவரை அறிந்தவர் ஆந்திர எல்லைக்கு அப்பால் யாரும் இல்லை. முதல் அமைச்சராகக் கூட தன்னை அவர் பிரபல்யப்படுத்திக் கொண்டவர் கிடையாது.

அவர் ஆந்திராவின் முதல் அமைச்சரானதே தனக்கென ஒரு அடியார் கூட்டத்தை சேர்த்துக் கொள்ளும் வலு இல்லாதவர் என்ற காரணத்தால்தான். பின்னர் பிரதமர் பதவியும் அதே காரணத்தால் அவரைத் தேடிவந்தது.

ஆந்திராவின் கடும் எதிர்ப்பையும் மீறி இரு வருடங்களுக்குள் அவர் செய்து முடித்தது, நிலச் சீர்திருத்தம் தான். 1971 ல் இருந்து இன்றுவரை மேற்குவங்க கம்யூனிச கட்சியை அசைக்க முடியாதிருப்பதற்கும் காரணம், அவர்கள் ஆட்சிபீடம் ஏறியதும் அங்கு உடனே அவர்கள் சட்டமாக்கிய நிலச் சீர்திருத்தம் தான். இது தவிர அறிவுத் தேட்டம் கொண்ட மனிதர், அசாத்திய படிப்பாளி, ஏழு எட்டு மொழிகள் நன்கு அறிந்தவர். இத்தகையவர் எப்படி அரசியல் பலம் பெறமுடியும்?

**ஒரு மத்திய மந்திரி, தன் பங்களாவைவிட்டுத் தூரத்தில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்கு ஸ்பானிய மொழி கற்கச் செல்கின்றார் என்றால் அவரை மதிப்பவர்கள் யார் இருப்பார்கள்?**

இந்திய அரசியலில் எப்பிரதேசத்திலும் அப்படித்தான். உள்ளீடற்ற வாய் வீரர்களே இங்கு கீர்த்திமான்களாவார்கள். தமிழ் நாட்டைப் போல இங்கு அது ஒரு உச்ச நிலையைத் தொட்டுள்ளது. தில்லிக்கு ராவ் வந்த பிறகும் அவர் பெயர் அறிந்தவர் யாரும் இல்லை. ஒரு மத்திய மந்திரி, தன் பங்களாவைவிட்டுத் தூரத்தில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்கு ஸ்பானிய மொழி கற்கச் செல்கின்றார் என்றால் அவரை மதிப்பவர்கள் யார் இருப்பார்கள்? இது அதிகார பீடம். மனிதர் பெற்றுள்ள அதிகாரம் உலகம் அறிய வேண்டும். அறிவார்ந்த தேடல்களுக்கு இங்கு மதிப்பில்லை. அறிவு பெறப்படக் கூடும் சேவகர்களிடம் இருந்து, அதிகாரம் இருப்பின்.

இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னர் பிரதமரான ராஜீவ்காந்தி, அரசியலில் ஞான ஸ்தானம் பெற்றவர் இல்லை. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடுமாமே? நேரு குடும்பத்தில் யாரும், விமான பைலட்டாக இருந்தால் என்ன?, வீட்டை நிர்வகிக்கும் இத்தாலிய பெண்மணியாக இருந்தால் என்ன?, எல்லோரும் அரசு வாரிசு உரிமை பெற்றவர்கள் தாம். ஆனால் அதனை முதலில் இயல்பாக நிராகரிக்கும் ஒரு மனிதர் வித்தியாசமான ஜீவனாகத்தான் இருக்க வேண்டும். ராஜீவ் அத்தகைய வித்தியாசமான ஜீவனாகத்தான் இருந்தார்.

ராஜீவ் பிரதமராக இருந்த காலத்தில், நரம்மசிம்ம ராவ் வெளியுறவு, மனித வளம், உள்துறை என, பல முக்கிய பொறுப்புகளைக் கவனித்தவர். எல்லாமே மிகுந்த பொறுப்பும் உறுதி கொண்ட மனமும் ஒரு தூரப்பார்வையும் முக்கியமாகத் தேவைப்படுகின்ற பொறுப்புகள். ஆனால் அரசியல் இயல்பு எந்த மனிதரையும் அவர் இயல்புக்கு விட்டுவைப்பதில்லை.

ராவ் வெளியுறவு அமைச்சராக இருந்த போது, இந்தியாவின் சீனாவுடனான உறவுகள் மெல்ல மெல்ல மாற்றம் கொள்ள ஆரம்பித்தது. ராஜீவ் காந்தி, போர்பர்ஸ் பீரங்கி வாங்கியதில் தன் குடும்பத்துடன் (சோனியா காந்தி) நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த குட்டரோச்சி என்னும் இத்தாலியர் இந்த பேரத்தில் இடைபுகுந்து, தரகு கூலி பெற்றுக் கொண்டதாக குற்றச்சாட்டு எழுந்து அது பிரச்சனையானது. குட்டரோச்சி இந்தியாவை விட்டு வெளியேறினார். ராஜீவ் காந்தி குடும்பத்திற்கும், அதன் இத்தாலி உறவுகளுக்கும் இதில் பங்கு உண்டு என்ற பிரச்சாரம் பலப்பட்டு, உடன் வந்த தேர்தலில் அதுவே ராஜீவ் காந்தியும், காங்கிரசும் தோற்று ஆட்சி இழக்க காரணமாயின.

**மனம் உடைந்த நரசிம்மராவ் பெட்டி, படுக்கைகளோடு ஆந்திரா வில் தன் ஊருக்குத் திரும்பினார். தில்லி விமான நிலையத் தில் அவரை வழி யனுப்ப வந்தவர்களில் யாரும் இல்லை. மற்ற காங்கிரஸ் காரருக்கு அவர் இப்போது தீண்டத்தகாதவர்.**

மிக முக்கிய பதவிகளை வகித்த, அரசியலில் ஏறத்தாள இரண்டாம் பதவி வகித்தவரும், மிக அனுபவ சாலியும், மூத்தவருமான நரசிம்ம ராவை அப்போது காங்கிரஸ் தேர்தலில் நிறுத்தவில்லை. அவர் இப்போது தேவையற்றவராகிவிட்டார். மனம் உடைந்த நரசிம்ம ராவ் பெட்டி, படுக்கைகளோடு ஆந்திராவில் தன் ஊருக்குத்திரும்பினார். தில்லி விமான நிலையத்தில் அவரை வழியனுப்ப வந்தவர்கள் யாரும் இல்லை. மற்ற காங்கிரஸ் காரருக்கு அவர் இப்போது தீண்டத்தகாதவர்.

பதவி இல்லாவிட்டால் நிர்வாணமாகிவிட்டதாக உணரும் சாதாரண அரசியல் வாதியல்ல ராவ். அவர் ஆத்மார்த்தமாக தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடும் விசயங்கள் நிறைய உண்டு. இனி படிப்பதும், எழுதுவதும் தான் என்று எழுபது வயதாகிவிட்ட அவர் தனக்குள் தீர்மானித்துக்கொண்டார். மிக நெருங்கிய நண்பர்களுக்கு மட்டும் தன் மனத்தை திறந்து தன் வருத்தத்தைத் தெரிவித்தார். ஆனால் விதி மறுபடி அவருடன் விளையாடவிருந்தது.

அடுத்த தேர்தலில் ராஜீவ் காந்தி பிரச்சாரத்திற்காக தமிழ்நாடு வந்த போது கொல்லப்பட்டார். இந்திரா மறைந்த போதே தன்னை அடுத்த பிரதமராகக் கனவு கண்டவர் ப்ரணாப் முகர்ஜி. அவரும் தன் சொந்த வங்க மண்ணில் கால் பதிக்க இயலாதவர். இருப்பினும் கனவு காண தகுதி வேண்டுமா என்ன? இப்போ மறுபடியும் வாய்ப்பு தன் டெல்கி வீட்டுக் கதவுகளைத் தட்டுவதாக அவர் எண்ணினார்.

இதற்கிடையில் இன்னும் பல தலைவர்கள் இதே கனவோடு முளைத்திருந்தனர். அர்ஜுன் சிங், மத்தியபிரதேசத்தில் கால் ஊன்றக் கூடியவர், திரைமறைவு சாமர்த்தியங்கள் நிறைந்தவர். ஷராத் பவார், மஹாராஷ்டிர தலைவர். சக்கரை ஆலைத் தொழில் அதிபர்களிடையே செல்வாக்கு மிகுந்தவர். மராட்டியத் தலைவராகப் பெயர் பெற்றவர். இப்படி இன்னும் பலர். ஆனால் ஒவ்வொருவரும் மற்றவர்க்கு குழி பறிப்பர். இவர்கள் ஒவ்வொருவரின் பரஸ்பர மோதலால், அவர்களில் யாரும் காங்கிரஸ் அரசை ஒருங்கிணைத்துச் செயல்பட முடியாது. ஒவ்வொருவரும் தலைமை ஆசனத்தில் உள்ள சோனியாவுக்கு ஆபத்து விளைவிக்க கூடிய புடம் போட்ட அரசியல் வாதிகள். சாதாரண மனிதரிடம் எதிர்பார்க்கக் கூடும் தர்ம சிந்தனைகளை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே வயதானவரும் சொந்த மண்ணில் வேரற்றவரும், காங்கிரஸ் கட்சியிலேயே செல்வாக்கு அற்றவரும், பதவிக்காக சதி செய்யாதவருமான நரசிம்ம ராவை அழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

பெட்டி படுக்கையோடு போனவரை அழைத்து வந்து காங்கிரஸ் தலைவராக்கினார்கள். 'இந்த அரசியல் செல்வாக்கு இல்லாதவர் இருந்துவிட்டு போகட்டும், பின் நல்ல தருணம் பார்த்துக் கொள்ளலாம்' என்று போட்டியாளர்கள் அனைவரும் தீர்மானித்துக் கொண்டார்கள்.



(தொடரும்)

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# மரணத்தின் வாயிலில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக உயிர்பிழைத்த அதிசயம்

## நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான இரகசியங்கள் - 2

*வஸ்கொடகாமா ஆபிரிக்காவைச் சுற்றிக் கொண்டு இந்தியாவை அடைவதற்கான கடல் பயணத்தை ஆரம்பித்தான். அவனது கப்பல் மாலுமிகளான 160 பேரில், நூறு பேர் இனம் புரியாத ஒரு நோயினால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்தனர். இது 1497 யூலை ஒன்பதாம் திகதிக்கும், 1498 மே மாதம் முப்பதாம் திகதிக்கும் இடையில் நடந்தது.*

*1536ல் கலிபோர்ணியாவைக் கண்டுபிடிக்க மெக்சிக்கோவில் இருந்து புறப்பட்ட*

> மூப்பியல் ஆராய்வின் தந்தை Leonard Hayflick "மனிதர்கள் 115 வருடங்கள் வரை வாழ முடியும்" என்று ஒருபுறம் கூறும் போது, மறுபுறம் De. Linus Pauling "விட்டமின்களை எடுப்பதன் மூலம் மனிதன் 100 - 110 வருடங்கள்வரை வாழ முடியும். சில மனிதர்கள் 150 வருடங்கள் கூட வாழமுடியும்." என்று கூறுகின்றார்.

*Hernando Cortes கலிபோர்ணியாவைக் கண்டு பிடிக்கமு ன்னரே நாடு திரும்ப வேண்டியநிலை ஏற்பட்டது. காரணம் வேறு ஒன்றும் இல்லை, இதே மர்ம நோய் தாக்கி அவனது மாலுமிகள் இறந்து போனதே. 1577ல் ஒரு ஸ்பானிய போர்க்கப்பல் Sargasso கடலில் அநாதரவாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கப்பலில் இருந்த அனைவருமே இறந்து கிடந்தனர்.*

*1740 இன் பிற்பகுதியில் பிரித்தானிய அட்மிரல் ஜோர்ச் அன்சன் ஆறு கப்பல்களில் 961 மாலுமிகளுடன் பயணப்பட்டான். 1741 யூன் மாதம் அவன் வோண்ஃபெர்னாண்டேஸ் தீவை சென்றடைந்த போது 335 மாலுமிகள் மட்டுமே எஞ்சியிருந்தனர். மிகுதி அத்தனைபேரும் மர்ம நோயினால் இறந்து விட்டனர். அதிக நாட்கள் கடலில் பயணம் செய்கின்ற மாலுமிகளை தாக்கி கொல்லுகின்ற இந்நோய் எப்படி? எதனால்? வருகின்றது என்று ஒருவருக்கும் புரியவில்லை.*

*ஆரம்பத்தில் உடல் களைப்பு, தோலில் sal-low, Muscle pain, Depression, பாரதூரமான exhaustion, சிறுநீரகத்திலும், சுவாசப்பையிலும் (Pulmonary) பிரச்சினை, வயிற்றோட்டம் என்று ஒவ்வொரு கட்டமாக நகருகின்ற இந்நோய் இறுதியில் மரணத்தை ஏற்படுத்துகின்றது.*

*இதேசமயம் 1536ல் பிரான்சு நாட்டு Jacques Cartier சென் லோரன்ஸ் ஆற்றையும், இன்று கியுபெக் என்று அழைக்கப்படுகின்ற நகரத்தையும் கண்டுபிடித்த போது இன்னொரு அனுபவம் கிடைத்தது. இந்த இடத்தை இவனும், இவனது நண்பர்களும் அடைந்த போது இந்த மர்ம நோய் இவர்களைத்தாக்கி இருந்தது. புதிய மண்ணில் Jacques Cartier இன் இருபத்தி ஐந்து நண்பர்கள் இறந்து போனார்கள். மிகுதியாய் இருந்தவர்களும் மிக கவலைக்கிடமான நிலையில் இருந்தார்கள். இச்சமயத்தில் தற்செயலாக கார்டியே கியுபெக்கில் வாழ்ந்த ஒரு பூர்வீகக்*



*குடிமகனைச் சந்தித்தனர். அவர்களுடைய நிலையை கண்டறிந்த அந்த பூர்வீக வாசி ஒரு மரத்தைக் காட்டினான். மரத்தைக் காட்டியது மட்டுமல்ல, மரத்தின் பட்டையை அவித்து, நீரைக் குடிக்கும் படியும் அந்த பூர்வீகவாசி கூறினான். சைகைகளினால் இந்த செய்தியை அவன் சொல்வதற்கு நிரம்பக் கஸ்டப்பட்டிருப்பான்.*

*அவன் கூறியபடி அவர்கள் அந்த மரப்பட்டை அவிந்த நீரைக் குடித்தனர். என்ன ஆச்சரியம். மரணத்தின் வாயில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக உயிர் பிழைத்து எழுந்தனர். அந்த மரப்பட்டையில் அப்படி என்னதான் இருந்தது? அந்த மரத்தில் இருந்தது விட்டமின் சி என்று மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. விட்டமின் சி யில் அப்படி ஒரு சக்தியா?*

*சொறி கரப்பான் என்றும் Scurvy என்றும் அழைக்கப்படுகின்ற இந்த நோய், உடலில் உள்ள விட்டமின் சி குறைகின்ற போதே உருவாகின்றது. நீண்டகாலம் கப்பலில் பயணம் செய்பவர்களுக்கு, விட்டமின் சி உள்ள உணவுப் பொருட்களான பழங்கள், மரக்கறிகள் கிடைப்பதில்லை. அதனால் கப்பலில் பயணம் செய்தவர்களுக்கு இந்நோய் ஏற்பட்டது. விட்டமின் சி மனிதர்கள் உண்ணுகின்ற உணவில் இருந்து சில மாதங்களுக்கு முற்றாக தவிர்க்கப்படுமாயின், அந்நபருக்கு மரணமே நிகழும் என்று இன்று மிகத் தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளது.*

*மூப்பியல் ஆராய்வின் தந்தை Leonard*

## செழியன்

*Hayflick "மனிதர்கள் 115 வருடங்கள் வரை வாழ முடியும்" என்று ஒரு புறம் கூறும் போது, மறுபுறம் Dr. Linus Pauling "விட்டமின்களை எடுப்பதன் மூலம் மனிதன் 100-110 வருடங்கள்வரை வாழ முடியும். சில மனிதர்கள் 150 வருடங்கள் கூட வாழமுடியும்." என்று கூறுகின்றார்.*

*"மேலதிக விட்டமின் சி யை (3,200 தொடக்கம் 12,000 Mg) தினமும் தொடர்ந்து எடுப்பதன் மூலம் மட்டுமேயே, எமது வாழ்கையை பன்னிரெண்டு வருடங்களில் இருந்து, பதி-னெட்டு வருடங்கள் வரை அதிகரித்துக் கொள்ளலாம்" என்று இந்த மனிதர் கூறுகின்றார்.*

*Dr. Linus Pauling , இரசாயனத்திற்கும், சமாதானத்திற்குமாக இரண்டு தடவைகள் நோபல் பரிசு பெற்றவர். விட்டமின்கள் பற்றிய ஆராய்ச்சியில் தன்னை உட்படுத்திக் கொண்டவர். "நீண்டகாலம் உயிர்வாழ்வது எப்படி?" என்ற புத்தகத்தையும் இவர் எழுதியுள்ளார்.*

*விட்டமின்கள் ஒரு காபன் சேர்க்கையினால் (Organic chemical) அமைந்த இரசாயனப் பொருளாகும். கனியுப்புக்கள் (Mineral) ஒரு காபன் அற்ற (Inorganic chemical) இரசாயனப் பொருளாகும்.*

*Dr Linus Pauling க்கு முதலில் 1960 லேயே விட்டமின்கள் பற்றிய ஆர்வம் எழுந்தது. அதற்கு காரணம் அவர் சந்தித்த Irwin Stone என்ற Biochemist. Irwin Stone, 1930களில் இருந்தே இந்த விட்டமின்கள் பற்றிய ஆராய்ச்சியை செய்து கொண்டிருந்தவர்.*

*சில விலங்குகள் தமக்குத் தேவையான விட்டமின் சி யை தாமே உருவாக்கிக் கொள்ளும் சக்தியை படைத்துள்ளன என்று Stone கண்டறிந்திருந்தார். அதே சமயம் மனிதர்கள், மனிதக் குரங்குகள், பழம் உண்ணும் வௌவால்கள், Guiner பன்றிகள் போன்ற பாலூட்டிகள் மட்டுமே தமக்குத் தேவையான விட்டமின் சி யை தாமே உற்பத்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. அதற்கான காரணம் விட்டமின் சியை உடலில் தொகுப்பதற்குத் தேவையான ஓமோன்கள் இந்த பாலூட்டிகளிடம் இல்லாததே என்றும் Stone அறிந்திருந்தார். விட்டமின்*
*சி யை தனது உடலில் தானே உற்பத்தி செய்யும் சக்தியை 25 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே மனிதன் இழந்து விட்டான் என்று இவர் கூறுகின்றார்.*

*விட்டமின்கள் மட்டுமல்ல கனியுப்புகள் கூட மனிதன் நீண்டகாலம் உயிர்வாழவும், வாழ்கின்ற காலத்தில் ஆரோக்கியமாக இருக்கவும் முக்கிய காரணிகளாக உள்ளன. எந்தெந்த விட்டமின்கள், எந்தெந்த காரணங்களுக்காக முக்கியத்துவம் வாய்ந்தன என்பதை நாம் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டியது அவசியம்.*

*அது எல்லாம் இருக்க ஒரு குழந்தை உருவாகுவதற்கு முன்னரே, ஒரு விட்டமின் அந்தக் குழந்தைக்கு மிக மிக அவசியமாகத் தேவையாக உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா?*

> *மனிதர்கள், மனிதக் குரங்குகள், பழம் உண்ணும் வௌவால்கள், Guiner பன்றிகள் போன்ற பாலூட்டிகள் மட்டுமே தமக்குத் தேவையான விட்டமின் சி ஐ தாமே உற்பத்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. அதற்குக் காரணம் விட்டமின் சி ஐ உடலில் தொகுப்பதற்கு தேவையான ஓமோன்கள் இந்த பாலூட்டிகளிடம் இல்லாததே.*

*ஆச்சரியமாக உள்ளதா?*

*அது பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.*

*(தொடரும்)*




நீங்கள் புதிய வீட்டுக்கு செல்லத் தயாராகுங்கள்!

நான் Mortgage விடயங்களைப் பார்த்துக்கொள்கிறேன்!

0% Down

digi

| 5 % | 4.5 % | From 1.75 % |
|---|---|---|
| 5years | 3years | Variable |

Switch, Re Finance, Debt Consolidation
Bad or No Credit

100 FREE AIR MILES TO ALL MY CLIENTS

CENTUM
Looking out for your best interest

CENTUM Advance Realty Inc.
80 Corporate Dr., Ste 203, Toronto, ON, M1H 3G5
jerad_emmanuel@centum.ca



Jerad Emmanuel
Mortgage Specialist

Business: 416.290-1200
Cell: 416-908-7066

# இறைவன், மனிதன், மிருகம்

*இறைவன் :- இந்துமகா சமுத்திரத்தில் கடற்கோளினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் உண்டான உயிர்ப்பலிகளினால் பொதுவாக அனேகரின் மனங்களிலும் எழுந்துள்ள கேள்வி என்னவெனில் இறைவன் இருக்கின்றானா? இருக்கின்றான் எனில் அப்பாவி உயிர்களை ஏன் காப்பாற்றாமல் விட்டான்? என்பதுவே. எல்லா மதத்தினர்க்கும் உள்ள பொதுவான நம்பிக்கை இறைவன் இருக்கின்றான். அவன் தான் உலகினை படைத்து, காத்து, அழிக்கின்றான் என்று. படைத்ததும் உண்மை அழிந்ததும் உண்மை. அவன் செய்யும் தொழில்கள் மூன்றில் இரண்டினை செய்து, தான் இருப்பதை தெரியப்படுத்தி உள்ளான் என்றே நாம் கொள்ள வேண்டும். இன மத மொழி பேதமின்றி, பெரியவர்கள் சிறியவர்கள் என வேறுபாடு காட்டாமல் எல்லோரையும் சமமாக நடத்தி உள்ளான். தான் படைத்த படைப்புக்களில் மனிதப்படைப்பினை மேன்மை யாக்க ஆறாவது அறிவான பகுத்தறிவையும் கொடுத்து படைத்தும் என்ன பயன்? இன மத துவேசங்களும், சந்தர்ப்பவாதங்களும், போட்டிகளும், பொறாமைகளுமே கண்ட மிச்சமாக இருக்கும் போது இறைவன் மீது சந்தேகப்பட்டு என்ன பயன். அழிவை பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட இனத்தின் மீதோ, மதத்தின் மீதோ பழியைப்போட்டு தம்மையும் தமது இனத்தையும் தமது மதங்களையும் மேன்மையானதாக காட்டி தம்பட்டம் அடித்து இலாபம் காணும் மனித இனத்திற்கு இறைவன் செய்ததெல்லாம் சமதர்மமே.*

*செய்ய நீண்ட கால திட்டம் வகுக்கும் மேற்குலக நாடுகள் ஒருபுறம், வல்லரசு நாடாக இருந்து கொண்டு மற்றைய நாடுகளில் அழிவுகளை செய்வது மட்டுமல்ல நாம் மனிதாபிமானம் மிக்கவர்கள் கூட என்று உலகத்திற்கு காட்டிக்கொண்டு அரசியல் இலாபம் தேடும் அமெரிக்கா ஒருபுறம் என்று தமது ஆறாவது அறிவை மனிதர்கள் தமது தேவைகளுக்கு ஏற்றவாறு பயன்படுத்துவதும் நன்றாகவே விளங்குகின்றது. இவ்வளவை யும் பார்த்து இறைவனே தலைகுனிவான். அழிவில் ஒன்று படுவார்கள் என்று தனது எண்ணத்தில் இடி விழுந்ததாக துவண்டு இருப்பான்.*

*மிருகம் :- மனிதர்களை விட அறிவு ஒன்றை குறைவாக பெற்றிருந்தும், அறிவில் மனிதனை வென்று அழிவை முன்கூட்டியே உணர்ந்து தம்மையும் தமது இனத்தையும் காப்பாற்றிக் கொண்டதையும் என்னவென்று சொல்வது. வீடுகளில் கட்டி வளர்க்கும் மிருகங்கள் தவிர்ந்த அனைத்துமே தம்மை பாதுகாத்து அழிவில் இருந்து தம்மை காத்துக்கொண்டன. கட்டி வளர்த்தவைகளில் பல கட்டினை அறுத்தெறிந்து ஓடி தம்மை காத்துக் கொண் டனவாம். ஆறறிவு கொண்ட மனிதனோ அறிவு கெட்ட தனமாக மிருகங்களே வெட்கிதலை குனியும் வகையில் நடந்து கொள்ளும் போது, ஐந்தறிவு கொண்ட மிருகங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டதனால் மனிதனை விட மிருகங்களே சிறந்தவைகளாகின்றன.*



*சிங்கள அரசியல் வாதிகளின் செயல்களுக்கு ஆதரவாகவும், அவர்களின் செயல்களுக்கு சாதகமாகவும் இருக்கின்றான் என்று நாம் கடந்து வந்த பாதையை தெரியாதவர்களும் போராட்டத்தையும், இயற்கை அழிவையும் சாதகமாக்கி பணமாக்கி வாழும் சிலரும் எண்ணுவதும் புரிகின்றது. புத்திசாலித்தன மாக எம்மை பாதுகாத்துக் கொள்வது வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் ஒப்பாரிவைத்து சிங்கள அரசாங்கம் எம்மை வாழ விடவில்லை இல்லை என கூக்குரல் வைப்பதினை நிறுத்தி ஐ.நா. உட்பட மற்றைய நாடுகள் எம்மை உதாசீனம் செய்வதன் காரணங்களை கண்டறிந்து எம்மை நாமே ஆள வழிவகுப்போம். மற்றைய நாட்டவர்கள் எமக்கு உதவுவதற்கான வழிகளை கண்டறிவோம். இதுவே ஈழத்தமிழர்களுக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுக்கும்.*

*சிந்தனை தொடரும்*

பரம் ஜி

ஒரு சாதாரண மனிதன்

## சாதாரண மனிதன் சிந்தனையிலிருந்து

*மனித அழிவு இந்து மகாசமுத்திரத்தை சார்ந்த நாடுகளை மட்டும் பாதிக்காமல் ஆபிரிக்காவில் சோமாலியாவையும் ஐரோப்பாவின் சுவீடன் நாட்டு மக்களில் இயற்கை அழிவில் மனித உயிர்கள் பெரிய அளவில் அழிக்கப்பட்டதும் இதே கடற்கோள் என்பதும் இறைவன் சமதர்மத்தை நிரூபிக்கின்றான். அழிவினை கொடுத்து உலகினை ஒன்றுபட வைத்திருக்கின்றான்.*

*மனிதன் :- ஆறறிவினால் உலகினை வென்ற மனிதன் வான்வெளியில் கால்பதித்தும் என்ன பயன்? வாழுகின்ற பூமியிலேயே தமது இனத்தை காக்க முடியவில்லை. அழிவிற்கு ஆறுதல் செய்யவும், ஆதரவு கரம் கொடுக்கவும் என்று உலகமே ஒன்று திரண்டு உதவி வருவது மனதிற்கு இதமாக இருந்தபோதும், எரிகின்ற வீடுகளில் பிடுங்கிய ஆதாயம் என்ற வகைகளில் வெட்கம், மானம் விட்டு ஆதாயம் தேடும் மனிதர்கள் ஒருபுறம், வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல் செய்பவனே மனிதன் என்ற நிலையில் பலர் தர்மம் செய்ய, கொடுத்த சில்லறையை ஊர் எல்லாம் தம்பட்டம் அடித்து உலகத்தின் கண்களுக்கு தம்மை தர்மசீலர்களாக காட்டிக்கொண்டு வியாபாரம் செய்யத் திட்டமிட்டு போட்டி போடுபவர்கள் ஒருபுறம். தாயை, தந்தையை உறவுகளை இழந்த அனாதைகளான சிறுவர்களை கடத்தி விபச்சாரத் தொழில் செய்ய வைத்து பணம் தேட முயலும் கூட்டம் ஒருபுறம், தர்மம் என்ற பெயரில் போட்டி போட்டு உதவி செய்து அடிபட்டு கிடக்கும் நாடுகளில் வியாபாரம்*

*ஈழத்தமிழர்கள்: ஈழத்தமிழர்களுக்கு ஏன் தொடர்ந்தும் இந்த அழிவு? இருபது வருடங்களுக்கு மேலாக தொடரும் அரசியல் அழிவுகளைத் தொடர்ந்து இப்போது இந்த இயற்கையின் அழிவு. இந்த அழிவுகளில் உலகமே ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடப்பது போல நிலைமைகள் இருக்கின்றன. ஈழத்தமிழர்களின் வாழ்க்கையே போராட்ட மாகி பலரும் திண்டாட போராட்டத்தையே தமது வாழ்க்கைக்கு சாதகமாக்கி வயிறு வளர்க்கும் ஒரு கூட்டம் இயற்கை அழிவினையும் தமக்கு சாதமாக்கி பணம் பண்ண முயலுவதும் புரிகின்றது. நாம் என்ன செய்யலாம்?*

*கடற்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு நேரடி நிவாரணத்திற்காக எமது சொந்த புனர்வாழ்வுக் கழகத்திற்கு நாம் பேராதரவு கொடுத்த போதும் நீண்ட காலமாக எமது தானத்தைப் பெறாத போதும் அப்பகுதிகளில் சேவை செய்து வரும் சர்வதேச செஞ்சிலுவை சங்க அமைப்புகளுக்கு தானம் கொடுத்தால் அந்த அமைப்புகள் எமது பணத்தில் ஒரு பகுதிதான் குறிப்பிட்டவர் களைச் சென்றடைவதுபோல் நாம் அவர்களை அவமதிப்பதுபோல பேசுவதையும் நடப்பதையும் தவிர்க்க வேண்டும். எப்படி எம்மை மற்றவர்கள் மதிக்க நடக்கலாம் என்பதில் எம்மில் பலருக்கு அக்கறை இல்லை. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலம் முதல் இன்று வரை நாம் செய்த அரசியல் தவறுகளால் நாம் படும் அழிவை உணரும் காலம் எப்போது வரும்? அதற்காக*


# ONTARIO REHABILITATION & RECOVERY CENTRE

- வாகன விபத்து
- விளையாட்டு முறிவு, தறிவு
- தசை நார் ஈய்வு
- நாரி நோவு, பிடிப்பு
- வேலைத்தள பாதிப்பு
- முள்ளந்தண்டு விலகல்
- கழுத்து பிடிப்பு
- பழைய நோவு

போன்றவற்றிலிருந்து மீள்வதற்கான பராமரிப்பு, உடற்பயிற்சிகள், தகுந்த ஆலோசனைகளிற்கான மையம்.

அக்குபஞ்சர் மற்றும் லேசர் மருத்துவம் போஷாக்கு பற்றிய அறிவுரை பராமரிப்பு.

**Specialists In:**

Chiropractic, Massage Therapy, Acupuncture, Laser Therapy, Physiotherapy and Exercise / Sports Injuries

## Tel.: 416.291.0299

Fax:416.291.0994

240 Alton Tower Circle, Unit 200

Scarborough, ON M1V4P2








வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

**Param Gnana**

Sales Representative
HomeLife GTA
Realty Inc.

www. themathuram.com

themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)

# சுனாமி! - உலக அணி VS ஆசிய அணி

## 50கோடி ரூபாய் திரண்டது!




கிரிக்கெட்டின் இருபெரும் ஜாம்பவான்களான சச்சின் டெண்டுல்கரும், பிரையன் லாராவும் சுனாமி நிவாரண நிதிக்காக கலந்து கொண்ட போட்டியில்

சுனாமி நலநிதிக்காக மெல்பேர்னில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், உலக லெவன் அணி 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆசிய லெவன் அணியை வீழ்த்தியது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுனாமி ராட்சத பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பொருட்டு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) இரண்டு ஒருநாள் போட்டித் தொடரை நடத்த முடிவு செய்தது. இதன்படி முதல் ஒருநாள் போட்டி அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இந்த முதல் போட்டியில் ரிக்கிபாண்டிங் தலைமையிலான உலக லெவன் அணியும், அணித்தலைவர் சௌரவ் கங்குலி தலைமையிலான ஆசிய லெவன் அணியும் மோதின. முதலில் களமிறங்கிய உலக லெவன் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களை குவித்தது. அடுத்து களமிறங்கிய ஆசிய லெவன் அணி 39.5 ஓவரிலேயே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால் உலக லெவன் அணி 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. உலக லெவன் அணியில் பாண்டிங், கில்கிறிஸ்ட், கெய்ல், லாரா, கெய்ன்ஸ், பிளமிங், ஹெய்டன் போன்ற நட்சத்திர வீரர்கள் இடம் பெற்றிருந்தனர்.

உலக லெவன் அணி சார்பில் அணித்தலைவர் ரிக்கிபாண்டிங் சதமடித்தது (115 ஓட்டங்கள்) ஆட்டத்தின் சிறப்பம்சமாகும். பாண்டிங் 102 பந்துகளை சந்தித்து மேற்படி சதத்தை பூர்த்தி செய்தார். அடுத்தபடியாக கிறிஸ்கெய்ன்ஸ் 47 பந்துகளில் 69 ஓட்டங்களை எடுத்தார். லாரா அரைசதம் (52) அடித்தார். பிளமிங் 30 ஓட்டங்களையும், வெட்டோரி 17 பந்தில் 27 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆசிய லெவன் அணி சார்பில் முரளீதரன் 3 விக்கெட்டுக்களையும், ஜாஹீர்கான் மற்றும் கும்ப்ளே ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், வாஸ் ஒரு விக்கெட்டுகளையும் எடுத்தனர்.

**எஸ். கணேஷ்**

ஆசிய லெவன் அணி தரப்பில் இந்திய அணியின் துணைக்கப்டனான ராகுல்டிராவிட் அதிக பட்சமாக 75 ஓட்டங்களை எடுத்தார். அடுத்த படியாக சேவாக் 45 ஓட்டங்கள் எடுத்தார். ஜெயசூரியா 28 ஓட்டங்களிலும், சங்கக்காரா 24 ஓட்டங்களிலும், கங்குலி 22, ரசாக் மற்றும் கும்ப்ளே ஆகியோர் தலா 11 ஆட்டமிழந்தனர்.

உலக லெவன் அணியில், வெட்டோரி 3 விக்கெட்டுகளையும், வார்னே 2 விக்கெட்டுக்களையும், மெக்ராத், டேரன்காப் மற்றும் கெய்ன்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை எடுத்தனர்.

முன்னதாக இப்போட்டியை அவுஸ்திரேலிய பிரதமர் ஜான்ஹோவர்டு துவக்கிவைத்தார். இப்போட்டியைக்காண 78,000 ரசிகர்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர். ரிக்கி பாண்டிங், கிறிஸ்கெய்ன்ஸ், ஷேவாக் லாரா மற்றும் டிராவிட் ஆகியோர் பந்துகளை மைதானத்தின் நாலாபுறமும் அடித்து ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தினர். சுனாமி நலநிதிக்காக நடந்த இப்போட்டியின் மூலம் 14.5 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் திரண்டது குறிப்பிடத்தக்கது.

### 2004 ரெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் லாங்கர், கும்ப்ளே முதலிடம்

2004ஆம் ஆண்டு கிரிக்கெட் ரெஸ்ட் வீரர்களுக்கான தரப்பட்டியலில் துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய துவக்க வீரர் ஜஸ்டின் லாங்கரும், பந்துவீச்சில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே ஆகியோர் முதலிடம் பிடித்துள்ளனர். லாங்கர் கடந்த ஆண்டு 1481 ஓட்டங்களை குவித்து அதிக ஓட்டம் குவித்த வீரர்களில் முதலிடம் பிடித்திருக்கிறார். இதன் சராசரி 54.85 ஆகும். இந்திய அணியின் மூத்த பந்துவீச்சாளரான அனில்கும்ப்ளே கடந்த ஆண்டில் 74 விக்கெட்டுகளை குவித்து அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்களில் முதலிடம் பெற்றிருக்கிறார். இதன் சராசரி 24.84.

இடதுகை துவக்க வீரரான லாங்கர் கடந்த ஆண்டு ரெஸ்ட் போட்டிகளில் 5 சதங்களை அடித்திருக்கிறார். ஒரு போட்டியில் அவர் அடித்த இரட்டைசதமும் (215) இதில் அடங்கும். தவிர ஆண்டில் அதிக ஓட்டக்குவிப்பில் 3வது இடம் பெற்று அந்தச் சாதனையை சமன் செய்திருக்கிறார். 1976ஆம் ஆண்டு மேற்கு இந்திய தீவுகளின் முன்னாள் அணித்தலைவரும் நட்சத்திர வீரருமான விவியன்ரிச்சர்ட்ஸ் 1710 ஓட்டங்களை குவித்ததே (ஒரே ஆண்டில்) இதுவரை சாதனையாக இருந்துவருகிறது. 1353 ஓட்டங்களை குவித்த மற்றொரு அவுஸ்திரேலியா வீரரான டேனியல்மார்டின் ஓட்டக் குவிப்பில் 2வது இடம் பெறுகிறார். இவர் 6சதங்களை அடித்திருக்கிறார். தென்னாபிரிக்க வீரரான ஜாக்ஸ்காலிஸ் 1288 ஓட்டங்களை பெற்று 3வது இடம் பிடித்திருக்கிறார். இவரது சராசரி 80.50 ஆகும். ஒரே ரெஸ்டில் அதிக எடுத்த வீரர்களில் மேற்குஇந்திய தீவுகள் அணியின் தலைவரான பிரையன்லாரா முதலிடம் பெறுகிறார். இவர் கடந்த ஏப்ரல் அதிக எடுத்த வீரர்களில் மேற்குஇந்திய தீவுகள் அணியின் தலைவராக பிரையன்லாரா முதலிடம் பெறுகிறார். இவர் கடந்த மாதம் இங்கிலாந்திற்கு எதிரான ரெஸ்டில் 400 எடுத்து (ஆட்டமிழக்காமல்) புதிய உலக சாதனை படைத்திருக்கிறார். இந்தவரிசையில் இந்திய துவக்க வீரரான வீரேந்தர் சேவாக் இரண்டாவது இடம் பிடித்திருக்கிறார் கடந்த மார்ச் மாதம்



போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவ் வாஹுடன் சுழல்பந்து வீச்சாளர் கும்ப்ளே மற்றும் இலங்கை அணியின் நட்சத்திரம் முரளீதரன்.

பாகிஸ்தானிற்கு எதிரான ரெஸ்டில் சேவாக் 309 குவித்தார். இதன் மூலம் கடந்த ஆண்டில் 300 ஓட்டங்களை கடந்த 2வது வீரர் என்ற பெருமையை அவர் பெறுகிறார். தவிர ஒரே ஆண்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்த பாகிஸ்தான் வீரர் சக்லைன் முஸ்டாக்கின் சாதனையையும் கும்ப்ளே முறியடித்திருக்கிறார். மேலும் கும்ப்ளே ரெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய இந்திய வீரரான கபில்தேவின் சாதனையையும் முறியடித்தது குறிப்பிடத்தக்கது.



## வாகனங்களை உருமாற்றுவது



வாகனங்களை உருமாற்றம் செய்வது இளைஞர்களிடையே ஒரு போட்டியுடன் செய்யும் விடயமாக காணப்படுகிறது. அதற்காக அவர்கள் செலவு செய்யும் தொகையும் கணக்கில் அடங்கா. $10,000 க்கு வாங்கிய வாகனத்திற்கு $10,000 க்கு மேல் செலவு செய்து சோடனை அலங்காரங்கள் செய்வது எவ்வளவு மடமைத்தனமான விடயம் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. ஏனெனில் அந்த வாகனத்தை விற்கும் போது நீங்கள் செலவு செய்த பணம் உங்களுக்கு கிடைக்கப்போவதில்லை.

அந்த விடயத்தை மனதில் நிறுத்துவதற்கு யாரும் நினைப்பதில்லை. எல்லாவற்றையும் விட அந்த வாகனம் விபத்தில் சிக்கும் போது உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துகிறது என்பதையும் புரிந்து கொள்கிறார்கள் இல்லை.

நான் Honda வாகன விற்பனை முகவராக 7 வருடத்திற்கு மேல் வேலை பார்ப்பதால் அந்த வாகனங்களின் விடயங்கள் அறிவுக்கு எட்டியளவு இருப்பதால் இதை உங்களுக்குத் தருகிறேன். ஹொண்டா வாகனங்களைப் பொறுத்தவரையில் அந்த வாகனங்கள் விபத்தில் சிக்கும்போது அந்த வாகனத்தில் உள்ளிருப்பவரை காப்பாற்றி தங்களை அழித்துக் கொள்கின்றன.

அதாவது விபத்தின் தாக்கங்களை தாங்கள் ஏற்றுக்கொண்டு வாகனத்தின் உள்ளிருப்பவரை பாதுகாக்கக் கூடிய முறையிலேயே தயாரிக்கப்படுகின்றன. ஆனால் நாங்கள் அந்த வாகனங்களை மாற்றி அமைக்கும் போது விபத்தின் முடிவுகள் மாற்றி அமைக்கப்பட்டு விடுகின்றன.

சகோதரர்களே இதுவரை உங்கள் வாகனங்களை உயர்த்தியதும் பதித்ததும் போதும் இனிமேல் வேண்டாம். மீண்டும் சந்திக்கும்வரை
உங்கள்
சோதீஸ்

**அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்**




# MANIKKANDAN
## Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்லி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.

**கிளை**

1585 Ellesmere Rd.
(Progress Park Plaza)
416.438.2225



Wedding or any Occasions
Special Deals Available



- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு

**இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள் மணிகண்டன்.**

Call: Siva: 416-283-1260

790 Military Trail , Unit 1A, Scarborough ON M1E 4P7

# இதுவரை வீட்டு வியாபாரத்தில் சிறந்த ஆண்டு - 2004

2 0 1

| Year | Number of Sales | Average Price |
|---|---|---|
| 1970 | 10,498 | 29,492 |
| 1971 | 13,085 | 30,426 |
| 1972 | 14,613 | 32,513 |
| 1973 | 16,335 | 40,605 |
| 1974 | 17,318 | 52,806 |
| 1975 | 22,020 | 57,581 |
| 1976 | 19,025 | 61,389 |
| 1977 | 20,512 | 64,559 |
| 1978 | 21,184 | 67,333 |
| 1979 | 23,466 | 70,830 |
| 1980 | 26,017 | 75,694 |
| 1981 | 29,625 | 90,203 |
| 1982 | 25,336 | 95,496 |
| 1983 | 30,046 | 101,626 |
| 1984 | 31,905 | 102,318 |
| 1985 | 45,509 | 109,094 |
| 1986 | 52,919 | 138,925 |
| 1987 | 43,475 | 189,105 |
| 1988 | 49,381 | 229,635 |
| 1989 | 38,960 | 273,698 |
| 1990 | 26,779 | 255,020 |
| 1991 | 38,144 | 234,313 |
| 1992 | 41,703 | 214,971 |
| 1993 | 38,990 | 206,490 |
| 1994 | 44,237 | 208,921 |
| 1995 | 39,273 | 203,028 |
| 1996 | 55,779 | 198,150 |
| 1997 | 58,014 | 211,307 |
| 1998 | 55,344 | 216,815 |
| 1999 | 58,957 | 228,372 |
| 2000 | 58,343 | 243,255 |
| 2001 | 67,612 | 251,508 |
| 2002 | 74,759 | 275,231 |
| 2003 | 78,898 | $293,067 |
| 2004 | 83,501 | $315,231 |

2004 ஆம் ஆண்டில் 83,501 வீடுகள் கைமாறியுள்ளன. இதுவரை Toronto Real Estate Board இனால் பதியப்பட்ட கணக்குகளில் இந்த ஆண்டே ஆகக்கூடிய வீடுகள் விற்று வாங்கப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு முந்திய ஆண்டை விட இவ்வருடம் (2004) 6% அதிகமாக வீடுகள் கைமாறியுள்ளதாக TREB அதிபர் றொன் ஏபிரகாம் தெரிவித்துள்ளார். 2004ஆம் ஆண்டில் வீட்டின் விலை முந்திய ஆண்டாகிய 2003ஐ விட 7% அதிகரித்துள்ளது.

2004ஆம் ஆண்டு வீட்டின் சராசரி விலை $315,231 ஆக அதிகரித்துள்ளது. பொதுவாக டிசெம்பர் மாதம் வியாபாரத்தில் மந்தம் ஏற்படுகிறது இயல்பு; இருந்தும் 2004ஆம் ஆண்டில் 4232 வீடுகள் கைமாறியுள்ளன.

Housing Economist Will Dunning இன் கூற்றின்படி; மக்கள் எதிர்காலங்களில் நகரங்களை விட்டு வெளியே தமது வீடுகளை வாங்குவார்கள் எனத் தெரிகிறது. ரொறொன்ரோ பிரதேசப் பகுதியில் வீட்டின் விலையில் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்பே முக்கிய காரணமாகக் கூறப்பட்டபோதும், ரொறொன்ரோ நகரத்திலுள்ள வீடு கட்டக்கூடிய நிலத்தின் அளவும் அரிதாக வருவதும் இன்னொரு காரணமாகும்.

வீடு சம்பந்தமாக கிடைத்த தகவல்களின்படி Toronto Real Estate Board இன் 84 வருட கால வரலாற்றில் கடந்த வருடமே ஆகக்கூடிய வீடுகள் கைமாறியுள்ளன. (83,501 வீடுகள்) இந்த எண்ணிக்கை இதற்கு முந்திய ஆண்டாகிய 2003ஐ விட 3603 அதிகமாகும்.

2004ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் SARS இனால் பொருளாதாரத்தில் மந்த நிலை ஏற்பட்டு இருந்த போதும், வருடத்தின் மத்திய பகுதியில் சாதகமான வட்டி வீதம், தனிப்பட்டவர்களின் வருமானத்தில் வளர்ச்சி, வேலை செய்பவர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு போன்றவை வீட்டுச் சந்தையில் அனுகூலத்தை ஏற்படுத்தியது.




## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

வருடக்கடைசியில் வட்டி வீதம் அதிகரிக்கும் என்ற எதிர்பார்க்கப்பட்டபோதும் கனடிய டொலரின் பெறுமதி தொடர்ந்து அதிகரித்து வந்ததால் வட்டி வீதம் அதிகரிக்கப்படாமல் காணப்பட்டது.

இதனால் Canada Mortgage and Housing Corporation தனது எதிர்வு கூற்றில் 2005ஆம் ஆண்டு வீட்டு வியாபாரத்தில் ஆரோக்கியமான ஆண்டாகக் காணப்படும் எனக் கூறியுள்ளது...

**Interest Rate**

| | |
|---|---|
| 5 Yrs Mortgage | 4.8% |
| 3 Yrs Mortgage | 4.50% |
| Prime Rate | 3.75% |
| Bank Rate | 2.00% |





# கனடாவின் பேரழிவு நிவாரண உதவிக்குழு

## (Canadian Military's Disater Assistance Response Team - DART)



கனடாவின் DART வைத்திய சேவை பிரிவினை சேர்ந்த சார்ஜன் ரொன் அன்ரசன் (Sergeant Ron Andersen) கல்முனையில் உள்ள ஒரு வைத்தியசாலையில் குழந்தை ஒன்றை பரிசோதிக்கிறார்

DART அமைக்கப்பட்டதிலிருந்து இதுவரை அது இரண்டு தரம் வெளிநாடுகளுக்கு பேரழிவு நிவாரண உதவிக்காக அனுப்பப்பட்டது. ஒக்ரோபர் 1998 இல் கொன்டூரஸ் (Honduras) இல் வந்த பெரும் சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவு நிவாரண உதவிக்காக DART முதலில் அனுப்பப்பட்டது. இதன் பின்னர் துருக்கி (Turkey) இல் ஒகஸ்ட் 1999இல் வந்த பெரும் நில நடுக்கத்தால் ஏற்பட்ட பேரழிவு நிவாரண உதவிக்காக DART அனுப்பப்பட்டது. கெயிட்டி (Haiti) இல் 2004இல் ஏற்பட்ட சூறாவளியின் போது DART அனுப்பப்படுவது பற்றி கனேடிய அரசாங்கம் யோசனை செய்தது. ஆனால் DART ஒருமுறை சென்று வரும் செலவு 20 மில்லியன் கனேடிய டொலராகும். இந்த செலவினை கருத்தில் கொண்டு கெயிட்டிக்கு DART ஐ அனுப்புவதில்லை என கனேடிய அரசு முடிவு எடுத்தது. இப்போது மூன்றாவது முறையாக DART சுனாமியால் ஏற்பட்ட பேரழிவு நிவாரண உதவிக்காக அம்பாறைக்கு அனுப்பப் பட்டுள்ளது. இம் முடிவை கனேடிய அரசாங்கம் ஜனவரி 3, 2005 இல் எடுத்தது.

### DART ஆல் என்ன உதவிகள் செய்யமுடியும்?

200 கனேடிய இராணுவ வீரர்களை கொண்ட இந்த "பேரழிவு நிவாரண உதவிக்குழு" சாதாரணமாக 40 தொடக்கம் 50 நாட்களுக்கு மட்டுமே வெளிநாட்டில் தங்குவது வழக்கம். இக்குழுவின் பணிகளில் முக்கியமானவை நான்கு. அவையாவன :-

1. அவசிய மருத்துவ உதவி வழங்குவது - DART இன் தற்காலிகமான கூடார மருத்துவ மனை ஒரு நாளைக்கு 250 வெளிநோயாளர் களையும் 10 படுக்கைவசதி தேவைப்படும் உள்ளக நோயாளர்களையும் பராமரிக்க கூடியது. இந்த மருத்துவ கூடாரத்தில் பரி சோதனைக்கூடம் (Lab) மருந்தகம் (Phamarcy) பிரசவ பராமரிப்பு (Obstetrics) மற்றும் தொற்றுநோய் தடுப்பு வசதிகள் உண்டு. ஆனால் பெரிய சத்திர சிகிச்சைகள் (operation) இக் கூடாரத்தில் செய்யமுடியாது.

2. பாதுகாப்பான குடிநீர் வழங்குவது - DART இல் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு குழு ஒரு நாளைக்கு 50,000 லீற்றர் நீரை சுத்திகரித்து குடிநீராக்க கூடிய இயந்திரங்களில் நான்கை கொண்டுள்ளது. இந் நான்கு இயந்திரங்களும் அம்பாறையிலுள்ள குளத்து நீரை சுத்திகரித்து ஒரு நாளைக்கு 200,000 லீற்றர் குடிநீராக உள்ளூர் வாசிகளுக்கும் மருத்துவ மனைகளுக் கும் வழங்கவுள்ளது.

3. கட்டிடங்கள் வீதிகள், பாலங்களை தற்காலிக மாக திருத்தி அமைத்தல் - DART இல் உள்ள பொறியியலாளர் குழு சேதமடைந்த கட்டிடங்கள் வீதிகள் மற்றும் பாலங்களை தற்காலிகமாக திருத்தி பாவனைக்கு உகந்ததாக மாற்றக்கூடிய வசதிகளை கொண்டுள்ளது. இவற்றை விட சேதமடைந்த மின்சார உற்பத்தி விநியோக அமைப்புக்களை திருத்தி அமைத்தல் உடனடி தற்காலிக அகதி முகாங்களை அமைத்தல் போன்ற பணிகளையும் இக்குழு செய்யக் கூடியது.

4. தொலை தொடர்பு சாதனங்களை இயக்குதல் - DART இல் உள்ள தொலை தொடர்புக் (Communication) குழு பேரழிவு ஏற்பட்ட இடத்தில் இயங்கும் வெவ்வேறு நிவாரண உதவிக்குழுக்களுக்கு இடையே தொடர்பு வசதிகளை உடனடியாக ஏற்படுத்தி உதவி வழங்கலை சீராக இயங்கச் செய்யும்.

இவ்வளவு உதவிகளை செய்யும் DART ஐ பராமரிக்க கனடிய அரசாங்கம் செலவழிப்பது வருடம் அரைமில்லியன் கனடிய டொலர் மட்டுமேயாகும்.

### DART இல் இருப்போரின் தகுதிகள் என்ன?

1. மருத்துவ குழுவை சேர்ந்த 40 இராணுவவீரர்கள்.
2. பொறியியலாளர் குழுவை சேர்ந்த 37 இராணுவவீரர்கள்.
3. பாதுகாப்பு குழுவை சேர்ந்த 45 இராணுவீரர்கள்.
4. போக்குவரத்து, பராமரிப்பு வசதிகளை வழங்கும் குழுவை சேர்ந்த 20 இராணுவீரர்கள்.
5. தொலைத் தொடர்பு மற்றும் தலைமையக வேலைகளை கவனிக்கும் 45 இராணுவீரர்கள்.

### DART எவ்வாறு அனுப்பப்படு கிறது?

பெரும்பாலும் பேரழிவு ஏற்பட்ட நாட்டின் அழைப்பின் பின்னர் அல்லது ஐக்கிய நாடுகளின் சபையின் வேண்டுகோளின் பின்னரே கனேடிய அரசாங்கம் DART ஐ அனுப்பலாமா அல்லது வேண்டாமா என்ற முடிவை எடுக்கிறது. முதலில் கனேடிய அரசு 12 தொடக்கம் 17 பேரை கொண்ட ஒரு "ஆரம்ப ஆராய்ச்சிக் குழுவை" (Reconnaissance Team) பேரழிவு ஏற்பட்ட இடத்திற்கு அனுப்பும் இவ் ஆரம்ப ஆராய்ச்சிக்குழுவில் DART இன் தலைமை யகத்தை சேர்ந்தவர்களை விட வெளிநாட்டு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு போன்றவற்றின் உயர் அதிகாரிகளும் மற்றும் கனடாவில் இருந்து வெளிநாடுகளில் உதவி செய்யும் அரசுசார்பற்ற குழுக்களின் (CIDA) உயர் அதிகாரிகளும் இருப்பார்கள். இவ்வாறு இலங்கை சென்ற 17 பேர் அடங்கிய குழுவே DART ஐ அம்பாறைக்கு அனுப்ப வேண்டும் என்று கனேடிய அரசிற்கு ஆலோசனை வழங்கியது. கனேடிய அரசு DART ஐ ஒரு நாட்டிற்கு அனுப்புவது என்று முடிவு எடுத்த 48 மணித்தியாலங்களில் DART தனது பொருட் களுடன் கனடாவை விட்டு வெளியேற தயாராகிவிடும்.

பெரும்பாலும் 40 வாகனங்கள் 340 தொன் உபகரணங்கள் மற்றும் 11 தொன் மருந்து களுடன் DART ஐ சேர்ந்த இராணுவவீரர்களை ஏற்றிக்கொண்டு ரென்ரனில் (CFB Trenton) உள்ள ஆகாயப்படைக்குரிய முகாமிலிருந்து விமானங்கள் புறப்படுகின்றன.

வழக்கமாக கனேடிய விமானங்களில் 16 பறப்புக்கள் மூலம் DART இன் குழுவும் உபகரணங்களும் கொண்டு செல்லப்படும். இம்முறை வாடகைக்கு அமர்த்தப்பட்ட பாரிய இரண்டு ரஷ்ய விமானங்களின் (Antonov) உதவியுடன் 4 பறப்புக்கள் மூலம் DART இன் குழுவும் உபகரணங்களும் கட்டுநாயக்காவிற்கு கொண்டு செல்லப்பட்டது.

### அம்பாறையில் DART என்ன செய்கிறது?

அம்பாறைக்கு அருகிலுள்ள ஒரு பழைய சீனித் தொழிற்சாலையை தனது ஆறுவாரகால சேவைக்குரிய தலைமை இராணுவமுகமாக கொண்டு DART இயங்குகிறது. அம்பாறை யிலுள்ள பல்வேறுபட்ட சுகாதார மையங்களில் DART இனை சேர்ந்த மருத்துவ குழுவினர் சேர்ந்து இயங்கி மருத்துவ உதவி வழங்குகின்றனர்.



கனடாவின் DART வைத்திய சேவை பிரிவின் அதிகாரியான மேஜர் மெல் ஸ்ரோரியர் (Major Mel Storrier) கல்முனை மாவட்ட வைத்திய அதிகாரியான திருமதி சகிலா ராணி ஐ சந்தித்து DART இன் வைத்திய சேவை திட்டங்களை ஆலோசிக்கிறார்.

அம்பாறையிலிருந்து ஒரு நாள் பிரயாணம் செய்யக்கூடிய தூரத்திலுள்ள இடங்களுக்கு DART இல் உள்ள மருத்துவ குழுவினர் பிரிந்து சிறு குழுக்களாக சென்றும் சேவை செய்கின்றனர்.

அம்பாறையிலிருந்து 30 km தூரத்திலுள்ள கல்முனைக்கு DART இன் பொறியியலாளர் குழு ஒன்று சென்று கட்டிட உடைவுகளை துப்பரவாக்கி சுத்திகரிக்க உள்ளது.

கல்முனை மாவட்டத்தில் மட்டுமே 14 தற்காலிக அகதி முகாம்கள் இருக்கின்றன. இவற்றிற்கு DART மருத்துவ உதவி வழங்குகிறது.

DART தனது முதலாவது நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை அம்பாறைக்கு அருகிலுள்ள ஒரு பழைய கைவிடப்பட்டுள்ள நீர்வழங்கும் நிலையத்தில் (Abandoned Pumphouse) நிறுவியுள்ளது. அம்பாறையில் நீர் நிலைகள் பயங்கரமாக மாசுபடுத்தப் பட்டுள்ளதாகவும் உப்பு நீரும், கழிவு நீரும் கலந்த நிலையிலே நீர் நிலைகள் இருப்பதாகவும் DART இன் நீர் சுத்திகரிப்பு குழு கூறுகிறது.

### DART அம்பாறையில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்ன?

இலங்கையின் அரசியல் பிரச்சினை உங்களுக்கு தெரியும்தானே. அதை விட்டு விடுவோம். அதைவிட்டால் வேறு என்ன பிரச்சினை என்று நினைக்கிறீர்களா? கனேடியர்களுக்கு இலங் கையில் உள்ள பாம்புகள், புலிமச்சிலந்தி, தேள், கொடுக்கன் எல்லாமே பிரச்சினையாகத் தான் தெரிகிறது. DART குழுவிற்கு இவற்றால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து தப்புவது எவ்வாறு என பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இலங்கை தான் உலகத்திலே பாம்புகள் அதிக அடர்த்தியாக வாழும் முதலாவது நாடு ஆகும். இந்த வெப்ப வலயத்தீவில் 2500 க்கு மேற்பட்ட விஷ ஜந்துக்கள் உள்ளனவாம். பாம்புக்கடிக்கு உடனடியாக மருத்துவவசதி எடுக்காவிட்டால் மரணம் தான் என DART உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**சிவ ஞானநாயகன்**

மலேரியாவை பரப்பும் நுளம்பு அடுத்த பிரச்சினை. DART உறுப்பினர்கள் பூச்சிகளை விரட்டும் (insect repellent) மருந்துகள் பூசுமாறும், அவர்களது காலணிகளை முற்றாக மூடியும், கூடாரங்களையும் முற்றாக மூடியும் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இவற்றுக்கு மேலாக இலங்கை வாகன ஓட்டுனர்களும் DART இற்கு பிரச்சினையாக இருக்கிறார்கள். கொழும்பிலிருந்து அம்பாறை செல்லுதற்கு இடையில் DART இன் வாகனங்களுக்கு குறுக்கால் ஓடி வந்த வாகனங்களுடன் இரண்டு தரம் அடிபட்டு DART குழுவினர் சிறிய விபத்துக்களுக்கு உள்ளானார்கள். இவ்வாறான பிரச்சினைகளை எதிர் நோக்கினாலும் இயற்கை எழில் கொஞ்சும் இலங்கையை தமது கொழும்பு அம்பாறை பிரயாணத்தின் போது இரசித்ததாக DART குழு உறுப்பினர்கள் கூறினார்கள்.

சிவனொளி பாதமலை, தேயிலை தோட்டங்கள், வானளாவ வளர்ந்துள்ள மரங்கள் இங்கும் அங்குமாக பாய்ந்து செல்லும் குரங்குகள் எல்லாவற்றையும் தமது கமராவிற்குள் அடக்கிவைத்திருப்பதாக DART உறுப்பினர்கள் கூறுகிறார்கள். இலங்கை மக்களும் DART கொழும்பிலிருந்து அம்பாறை செல்லும் வழியில் நின்று "Hello Canada" என்று உற்சாகத்தில் கத்தி வரவேற்றார்கள்.

இன்னும் ஆறு வாரங்களில் இலங்கையை விட்டு நாம் வெளிக்கிடும் போது இலங்கை மக்களுக்கு பிரயோசனமான நிலைத்து நிற்க கூடிய பல செய்திட்டங்களை முடித்து உள்ளூர் மக்களின் மனத்தில் இடம்பிடித்தே வெளிக்கிடுவோம் என்று DART இன் கட்டளைத் தளபதி லெப்ரினன் கேணல் மைக் வோத் கூறுகிறார்.



படங்கள்
நன்றி: கனடிய பாதுகாப்பு அமைச்சு

# ஆபத்துக்கு உதவுவதில் தமிழர் பின்னிற்பதில்லை!

'ஹலோ'
'வணக்கம், ஐயா! உங்கடை ஆட்கள் ஆரும் பாதிப்புக்குள்ளாயிருக்கினமே?'
'சொந்தத்துக்குள் இல்லை. மற்றும்படி பந்தத்துக்குள் 40,000 பேர் உயிரிழந்திருக்க லாம்'
'ஓம் ஐயா. 100,000த்திலிருந்து 160,000க்கு வந்திட்டுது. கடவுளே! கடவுளே!'
'யாருக்குத் தெரியும். இன்னும் அதிகரிக்க லாம். எல்லாம் எங்கள் தலைவிதி. தொலைக் காட்சியைப் பார்க்க நெஞ்சம் பதறுகிறது. இரத்தம் கொதிக்கிறது. தூக்கம் வருகு தில்லை. ஓர் ஆறுதல். நம்மவர்களின் நிதி சேகரிப்பு. எல்லோருமே வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர் எப்பொழுதுமே ஆபத்துக்கு உதவுவதிற் பின்னிற்பதில்லை'
'இந்தக் கொடிய சுனாமி பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ ஐயா.'

## அறுவை - 34

'சுனாமி என்பது அலைமலையைக் குறிக்கும் ஒரு ஜப்பானியச் சொல். புவி நடுக்கத்தால் சில சமயங்களில் கடல்அலை மலைபோலத் திரண்டு கரையோரப் பகுதிகளைத் தாக்குவதுண்டு. ஜப்பான், இந்தோனேசியா போன்ற புவி நடுக்க வலயத்து நாடுகளுக்குச் சுனாமி அனுபவங்கள் நிறையவே உண்டு. இப்போதைய அனர்த்தங்களுக்கும் இந்தோ னேசியாவில் தோன்றிய புவி நடுக்கந்தான் காரணம். மொத்தம் 14 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இந்தோ னேசியாவில் மட்டும் இதுவரை 80,000 மக்கள் உயிரிழந்துள்ளனர். தொகை அதிகரித்துக கொண்டே இருக்கிறது. அடுத்துப் பெருஞ் சேதத்துக்குள்ளாகி இருக்கும் நாடு இலங்கை. அதிலும் தமிழீழமே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.'

'அப்ப சுமாத்திரா என்றது..'



'சுமாத்திரா இந்தோனேசியாவின் தீவுகளில் ஒன்று. உலகத்தில் அதிக அளவில் தீவுகளைக் கொண்ட நாடு இந்தோனேசியா. மொத்தம் 13,677 தீவுகள். அதுமட்டுமல்ல குடித்தொகையைப் பொறுத்து உலகத்தின் ஐந்தாவது பெரிய நாடும் இதுவாகும். நூற்றுக்கும் அதிகமான எரிமலைகளைக் கொண்ட இந்நாடு புவி நடுக்கத்தாலும் இடைக்கிடை அழிவுகளைச் சந்தித்திருக் கிறது. இம்முறை நடந்த புவி நடுக்கம் சுமாத்திராவிலே தான் நடந்திருக்கிறது. இந்தோனேசியா இதுவரை காணாத மோசமான நடுக்கம்.'
'புவிநடுக்கம் ஏன் வருகுது?'
'நிலவியலில் இது பெரிய அத்தியாயம். இதனை விளங்கிக்கொள்ள வேறும் பல விஞ்ஞான அறிவு தேவை. தொலைபேசியில் விளக்குவது கடினம். இருந்தாலும் நீர் கேட்டதற்காகச் சிறிது சொல்கிறேன். புவி ஓடு பல துண்டங்களால் (blocks or plates) ஆனது. இவை புவியின் உட்சக்திகளால் நகர்வுக்குள்ளாகுந் தன்மையுடையன. அப்படி நகர்கையில் ஒன்றோடொன்று நேர்பட மோதின் புவிநடுக்கம் ஏற்படுகின்றது. மேலதிக விளக்கம் தேவையாயின் திரு. விஜே குலத்துங்கம் அவர்களுடன் பேசுங்கோ.
'எனக்கு அவரைத் தெரியும் ஐயா. தமிழ்த் தொலைக்காட்சியில் விஞ்ஞானமும் நாமும் நிகழ்ச்சி நடத்துகிறவர்தானே?'
'அவரேதான். விடயந் தெரிந்த விஞ்ஞானி அவர். நேரிலே சந்தித்தால் படங்களோடு விளக்குவார்.'
'கனடாவில் புவிநடுக்கம் வராது. என்ன ஐயா?'
'ஏன் வராது. 1988 நவம்பரில் குவிபெக்கில் வந்திருக்கே. குவிபெக் மாநிலத்தில் சென்லோரன்ஸ் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசம் புவிநடுக்கம் வரக்கூடிய பிளவுகளை (faults) யுடையது. சரி தம்பி. இன்றைக்கு பின்னேரம் சும்மா இருந்தால் வாருமன் ஒரு பிரார்த்தனைக்கு.'
'எங்கை நடக்குது? எத்தனை மணிக்கு?'
'நல்லூர் கந்தசுவாமி கோயிலில். நாலு மணியிலிருந்து ஆறு மணிவரை தாயகத்தில் அலைமலையினால் அள்ளுண்டு இறந்த எம்மவரின் ஆத்ம சாந்தியின்பொருட்டு கூட்டுப்பிரார்த்தனை நடத்தப்படும். அதன்பின் பேச்சுக்கள். அவற்றைத் தொடர்ந்து பூசை.'
'நான் கட்டாயம் வருவன் ஐயா. வணக்கம்.'
'வணக்கம்.'

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!



கவிஞர் வி. கந்தவனம்


# தமிழர் நிர்வாகத்தில் ஒரு

# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்

• வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
• இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
• இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



416-332-8451
Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944



Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்

• SONALIKA PURE SILK
• JARDHOSHI SATIN & CREPE SILK
• JAPAN CRYSTAL SILK
• JAIPUR CRYSTAL SILK
• VASUNTHARA NETWORK CREPE



பட்டுத் தெரிவுகள்
அனைத்துக்கும்

"நீலம் சில்க்"

T.P: 416-778-7455 Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)



mhc

# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022
5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4



# சலுகை விலையில் இலவச இணைப்புடன் "நிரு"

## விசேட பொங்கல் பொதிகள்

## பொதி 1

தீட்டிய
சிவப்புப் பச்சையரிசி
2 x 1 **kg** பைக்கற்
சர்க்கரை 400 g
இவை ஓர் அழகிய
பிளாஸ்ரிக் டப்பாவில்




இவை அனைத்தும்
ஓர் அழகிய
எவர்சில்வர் தட்டுடன்

தீட்டிய சிவப்புப் பச்சை அரிசி 1 kg
சிவப்பு அவல் 200g
சர்க்கரை 400g
வறுத்த பயறு 200g
முந்திரிகை வற்றல் 100g
கற்கண்டு 100g
ஏலக்காய் 10g
கஜு 100g

## பொதி 2

## முந்துங்கள்

**மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே
இவை விற்பனைக்குள்ளமையால்
உங்கள் வர்த்தகர்களிடம்
இன்றே கேட்டு வாங்குங்கள்**

**Manufacturers & Distributors of**
*Niru Brand*® Products

# "மோட்கேஜ் இன்சூரன்ஸ்" தவறு செய்தும் ஒரு பாதுகாப்பு

வங்கியினூடாக பெறும் "மோட்கேஜ் இன்சூரன்ஸ்" (Mortgage Insurance) என்பதில் "Mortgage Standard Clause" என்னும் ஒரு சட்ட பிரிவு வங்கியினையும், கடன் பெற்ற வாடிக்கையாளரையும் பாதுகாக்கின்றதே! அது என்ன? எப்படி பாதுகாக்கின்றது?



வங்கி ஒன்று தாம் வழங்கும் மோட்கேஜ் கடனுக்குரிய பாதுகாப்புக்காக ஏதாவது ஒரு காப்புறுதி கம்பனியில் கடன் பெற்ற வாடிக்கையாளரின் ஆயுளுக்கு காப்புறுதி ஒன்றினை செய்து வைத்திருப்பதன் மூலம் கடனுக்கு உரியவருக்கு ஏதாவது உயிர் இழப்பு ஏற்பட்டால் இவ் வங்கிக்குரிய கடன் தொகையினை ஆயுள் காப்புறுதி கம்பனி கொடுத்து தீர்த்துவிடும். மோட்கேஜ் கடன் முழுவதும் ஆயுள் காப்புறுதி கம்பனியினால் கொடுத்து தீர்க்கப்படும் போது, இம் மோட்கேஜ் கடன்கள் கொடுத்து தீர்க்கப்படுவதால் மோட்கேஜ் கடன் எதுவும் இல்லாத வீடு என்ற சொத்துக்கு வீட்டு உரிமையாளர் பூரணமாக சொந்தமாகின்றார்.

ஒரு வாடிக்கையாளரின் ஆயுளுக்கு காப்புறுதி செய்யப்பட்டாலும், இக் குறிப்பிடப்பட்ட மோட்கேஜ் இன்சூரன்ஸ்ஸின் உரிமையாளர் (owner) மற்றும் வாடிக்கையாளரின் வாழ்வில் உயிர் ஆபத்து நடந்தால் காப்புறுதி கம்பனியில் இருந்து பணத்தினை பெறுபவர் எல்லாம் வங்கி மட்டுமே.

பொதுவாக எந்தவொரு காப்புறுதி ஒப்பந்தங்களிலும் அது ஆயுள் காப்புறுதியாக இருந்தால் என்ன வேறுவிதமான காப்புறுதியாக இருந்தால் என்ன "At most good faith" என்ற, கருத்தினை காப்புறுதி கம்பனியும் ஒப்பந்தத்தில் ஈடுபடும் எவரும் பின்பற்ற வேண்டும். இத் தத்துவ கோட்பாட்டின் விளக்கம் என்னவென்றால் வாடிக்கையாளர் ஒருவர் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேரும் போது, உண்மையாக, நேர்மையாக, அதற்கு மேலாக ஒருபடி போய் அதி உயர் நேர்மை விசுவாசத்துடன் தகவல்களை வழங்கவேண்டும். அதே போல் காப்புறுதி கம்பனியும் ஒப்பந்தங்கள் சட்டங்களில் குறிப்பிடப்பட்டவாறு வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்காமல் தமது நட்ட ஈடுகளை கொடுத்து தீர்க்க வேண்டும்.

இதனை காப்புறுதி சட்டங்களும் அதனை மேற்பார்வை செய்யும் மத்திய மாகாண அரசுகளின் நிறுவனங்களும் என்றுமே கண்காணித்து கொண்டேயுள்ளன. ஆனால் மேற்குறிப்பிட்ட அடிப்படை கோட்பாட்டுக்கு முரணாக பொய்யான தகவல்களை, அதாவது இம் மோட்கேஜ் இன்சூரன்ஸ் ஒப்பந்தத்திற்கு சேரும் வாடிக்கையாளரின் உடல் நிலைமைகளில் மாறுபட்ட தகவல்களை வழங்கி காப்புறுதி பெற்றால் உயிர் இழப்பின் பின்பு மோசடி என குறிப்பிட்டு நட்ட ஈடு வழங்குவதனை காப்புறுதி கம்பனி


**சிவ. பஞ்சலிங்கம் B. Com,**

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


மறுத்துவிடும்.

ஆனால் மோட்கேஜ் இன்சூரன்ஸ்ஸில் குறிப்பிடப்படும் "Mortgag Insurance Standard Clause" என்னும் பிரிவு 33 இல் தப்பான தகவல்கள் வழங்கப்பட்டது என்ற காரணத்தினை வைத்து காப்புறுதி கம்பனி ஒன்று நட்டஈடு வழங்குவதனை மறுப்பதனை எதிர்த்து நிற்கின்றது. அதாவது பொய்யான தகவல் என்ற காரணத்திற்காக உயிரிழப்பு நட்டஈட்டினை மறுக்க முடியாது. இங்கு இந்த சட்டம் வாடிக்கையாளரையும் வங்கியினையும் பாதுகாக்கின்றது. இப்படி பாதுகாக்கப்பட்டவர் கள் கனடாவில் எங்கள் சமூகத்திலும் உண்டு.



ஆனால் இப்போது பல கம்பனிகள் பெருந் தொகையான அடமான காப்புறுதிகளுக்கு காப்புறுதி வழங்க முன்பு தீவிரமாக பரிசீலனையும் செய்து வருகின்றது என்பதும் குறிப்பிட வேண்டிய விடயமாகும்.


## யோகா சோதிடம்



- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

4 1 6 - 2 9 9 - 8 3 6 1





## S M I L E

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days



## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் **நந்தா**





**Nantha Aiyadurai**, B.Eng.

Sales Rep.

**Office :** **613.823.7555**
**Cell :** **613.866.9931**
**Toll Free :** **1 800 472.6512**

COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty



## DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca

# 2004இன் இறுதியில் வந்த ஒரு தரமான படம்



# ராமகிருஷ்ணா

கோடி கோடியாகச் சம்பாதித்தால் என்ன. சொந்தபந்தம், நட்பு, காதல் இவையெல்லாம் இல்லாமல்வாழும் கோடீஸ்வரவாழ்க்கை, ஒரு வாழ்க்கையா. என் மரணத்திற்குப்பின் இந்தக் கிராமத்திற்கு போ. பணக்கார சட்டையை கடாசிவிட்டு ஏழையாக வேலை செய்துபார். புரியும் என்று ரகசியம் உள்ளடங்கிய டைரியை எழுதிவைத்துவிட்டு, சரண்யா பூவும் பொட்டுமாய் மூச்சடங்கிப்போக, கதாநாயகன் ஜெய் ஆகாஷ் அந்தக்கிராமத்திற்கு வருகின்றார். அழகான கிராமம் வெள்ளந்தி யான மனிதர்கள், ஊர் பெரியவர்கள் விஜயகுமார் தலைமையில் அந்தக் கிராமம் நச்சுரங்கம் இல்லாத நந்தவனம் மாதிரி.

தாய் அனுப்பிய கிராமத்தில் தான் அப்பா இருப்பார். அவர்தான் விஜயகுமார் என்பது ஊகிக்கக்கூடியதுதான். சரண்யாவே ஒரு கட்டத்தில் "Clue" கொடுத்திருப்பார். என்றாலும் கதையின் போக்கில் மறந்து விடுகின்றது. பொதுவாக இம்மாதிரியான கதைகளில் ஜக்குவார் தங்கம் ஏற்றிருக்கும் வேடத்தை மகாமோசமான வில்லனாகத்தான் சித்தரிப்பார்கள். அகத்தியன் அம்மாதிரியான அக்கிரமங்களை செய்ய விருப்புகின்றவர் அல்ல. அக்கிரமங்களைகூட யதார்த்தமாகத் தான் பாத்திரப் படைப்பில் காட்டுவார். இதிலும் அப்படியே.

ஊர்ப்பெரியவர், உறவுக்காரர் ராமசாமியை சிலம்பு போட்டியில் ஜெயத்த பிறகு முறைப்பெண்ணை கல்யாணம் செய்வதாக ஜக்குவார் தங்கம் சபதம் செய்திருப்பார். அது இயலாமல் போனதும் கதாநாயகனை தீர்த்துக்கட்ட மற்றப்படி தனக்குக் கிடைக் காதவளை கட்டாயப் படுத்த வேண்டும் என்கின்ற எண்ணம் இல்லை. துளியும் சினிமாத்தனம் இல்லை. ஜக்குவாருக்கு நடிப்பதற்கு கிடைத்த வாய்ப்பு இயல்பான நடிப்பு. சிலம்புச்சண்டையில் டங்குவார் அறுந்துவிடுகின்றது. சந்தோஷத்திலும் அதேமுகம். சோகத்திலும் அதேமுகம். கோபத்திலும் அதேமுகம். இவர் தான் கதா-நாயகன் ஜெய் ஆகாஷ். பூஞ்சோலை ஸ்ரீதேவிகா, பவளக்கொடி வாணி இருவரும் சரியான வாய்ப்பட்டிகள், வாயைக் கொடுத்து மீளமுடியாது. "மாராப்பை இழுத்து விட்டுக்க" என்று பூஞ்சோலை சொன்னால் "இருக்கிறவ எப்படியும் இருப்பா உனக்கென்ன! என்கின்ற ரீதியில் விட்டுவிளாசுவது பச்சையாக இல்லாமல் ரசிக்கும்படியாக இருப்பதற்கு இயக்குநரும் காரணம். காட்சியை சிறப்பாக வடிவமைத்திருக்கின்றார்.

களைப்பு இல்லாமல் கதை ஒடுவதற்கு முக்கியகாரணம் காமடி. முத்துக்காளையிடம் மாட்டிக் கொண்டு சார்லி படும் அவஸ்தை படம் பார்க்கின்வர்களின் வயிற்றை புரட்டி எடுத்து விடுகின்றது. எல்லாப்பாடல்களும் இனிமை. அதிலும் சாதனா சர்க்கம் பாடுகின்ற "விருப்பமில்லையா" Number one. தேவாவுக்கு சிவசக்தி மூவி மேக்கர்ஸ் என்றால் தனிக்கரிசனம் அசத்தி விடுவார்.

சந்தோஷமாக கதையை முடித்திருக்கின்றார் இயக்குனர் அகத்தியன். ஆனால் கிளைமாக்கில் நம் கண்கள் கனத்து கார்மேகமாகி விடுகின்றது. சொந்தம், பந்தம், நட்பு, உறவு எவ்வளவு மென்மையானது என்கிற உணர்வு நம்மையறியாமலேயே நமக்குள் ஊடுருவி விடுகின்றது.

காதல்கோட்டை, காதல்கவிதை ஆகிய நல்ல படங்களின் வரிசையில் அகத்தியனின் "ராமகிருஷ்ணா"வும் சேருகின்றது.

- தகவல் பரம்




## YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733

416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



## NTE AUTO

**New Trade Engineering Inc.**




ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.



## SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL







Fork Lift licence $75.00

Truck licence $899.00

**In Classes**

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Excellent Quality - Low Cost Training

**Air brake $175.00**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Deepa / Shan

416.412.7618 / 416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# என்று தணியும் இந்த காதலின் மோகம்

## காதல்

நடிகர்கள் - பரத், சந்தியா, சுகுமார், சரண்யா, தண்டபாணி, மீனாட்சி, அலெக்ஸ், கிருஷ்ணமூர்த்தி
இசை - Joshua Sridhar
நெறியாள்கை - பாலாஜி சக்திவேல்
ஒளிப்பதிவு - Vijay Milton
எடிட்டிங் - G. Sasikumar

M.G.R காலத்து காதல் - பணக்கார யுவதி, ஏழை சாதாரண மெக்கானிக் இளைஞன் காதலிக்கிறான். அமெரிக்க மாப்பிளைக்கு திருமணம் நிச்சயார்தமாகவிருக்கும் சமயத்தில் இருவரும் மதுரையிலிருந்து சென்னைக்கு ஓடி வருகின்றனர். மகளை தேடி பணக்கார தந்தை கூட்டம் சென்னை வந்து அவர்களை அழைத்துச் செல்கிறனர். பின்னர் காதலன் காதலிக்கு கட்டிய "தாலி" அறுக்கப்டுகிறது. காதலிக்கு வேறு திருமணம் நடைபெறுகிறது. சில வருடங்களின் பின்னர் தனது பிள்ளை, கணவனுடன் வெளியில் செல்லும் அவள், தனது காதலனை பைத்திய மாகக் காண்கிறாள். ஓடிச் சென்று அழுகின்றாள். கணவன், மனைவியையும் மனைவியின் காதலனையும் வீட்டிற்கு அழைத்துச் செல் கின்றான். மனைவியின் காதலனின் பைத்தி யத்தை குணப்படுத்த வைத்தியம் செய்கின்றான். உண்மைக் கதை என்ற வரிகளுடன் சுபம்.

காதல் படங்கள் காலங்காலமாக வருகின்றன. M.G.R, சிவாஜி, K. பாலச்சந்தர், ஸ்ரீதர், பின்னர் பாரதிராஜா, பாக்கியராஜ், மகேந்திரன், மணிரத்தினம், இடையில் ஒருதலைராகம் பாடிய ராஜேந்தர் அதன் பின்னர் Boys தந்த சங்கர், சேரனின் Autograph, அழகி, சொல்லமறந்த கதை, 7G ரெயின்போ காலனி என பல வித்தியாசமான படிமங்களில் காதல் கூறப் பட்டுள்ளது. காதலின் பரிணாம வளர்ச்சியை இப்படங்களினை வரிசைப்படுத்துவதன் மூலம் காணலாம். ஒரு தலைராகத்துக்கும் ஆட்டோ கிராப்புக்கும் இடையில் எத்தனை வேறுபாடுகள்.

காதல் என்பதும் ஒரு சுயநல செயற்பாடே. அதனால் தான் தாடிகளும், தற்கொலைகளும் அதிகரித்துள்ளன. இப்படத்திலும் காதலன் பைத்தியமாக மாறுவது அவ்வாறான ஒரு செயற்பாடே. எத்தனை காலத்துக்கு இதனை நாங்கள் மக்களுக்கு கூறப்போகின்றோம். நான், எனது வீடு, எனது மனைவி, எனது சூழல் என்ற அகவெளிப்பாட்டுத் தன்மையே எனது காதல், எனது காதலி என்பது. ஓட்டோக்கிராப் இல் வந்த பரிணாம வளர்ச்சி இதில் தேய்வடைந்து விட்டது.

## வானரன்

இப்படம் (காதல்) பற்றி ரொறொன்ரோவில் உள்ள யுவதி ஒருவர் கூறிய கருத்து இது "ஒரு பள்ளி விருந்துக்கு மற்றும் பப்ளிக்கில் செல்லும் போது கைகோர்த்துக்கொண்டு செல்ல ஓர் ஆண் தேவை. அது அவர்களுக்கும் தெரியும். மற்றும்படி காதல் எல்லாம் இல்லை. ஒரு fun ஒரு enjoyment அவ்வளவுதான்."

இப்படத்தின் நாயகன் இறுதிக் காட்சியில் மனைவியின் காதலனை தன்னுடன் அழைத்துச் செல்லும் கணவனே. இவர் காதலை இங்கு வாழ வைக்கிறாரோ இல்லையோ, மனிதாபி மானத்தையும், மனிதத்தையும் வாழவைத்துள் ளார். உண்மைக்கதை என்ற அடிப்படையில் இவர் பாரட்டுக்குரியவர் மாத்திரமல்ல ஒரு நல்ல வழிகாட்டியுமாவார்.

தமிழ்த் திரைப்படங்கள் தாலியின் பெறுமதியை, முக்கியத்துவத்தை குறைத்து வருவது பாராட்டுக்குரியது. சிறையிலிருந்து காதல் வரை பல படங்களில் தாலி அறுத்தெறியப்பட்டுள்ளது. ஆனால் தொலைக்காட்சித் தொடர்கள் தாலியின் முக்கியத்துவத்தை சங்க காலத்துக்கு கொண்டு சென்றுள்ளன. காலத்தின் மாற்றம், திருமணம் என்ற பந்தமே வெறும் சுயநல செயற்பாடு என்ற மாற்றத்துக்கு இட்டுச் செல்கிறது. ஒரு ஆணுக் கும், பெண்ணுக்கும் அல்லது ஆணுக்கும், ஆணுக்கும், பெண்ணுக்கும், பெண்ணுக்கும் இருவரும் சம்மதிக்கும் சந்தர்ப்பத்தில் சேர்ந்து வாழவும் தாங்கள் விரும்பும் பொழுது பிரிவதற்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

வழமையான தமிழ்ப்படங்களில் இருந்து மாறு பட்டு காட்சிகள் மிகவும் யதார்த்தமாக அமைந்துள்ளன. ஆண்கள் மெஸ் இவ்வளவு இயல்பாக எந்த படத்திலும் காட்டப்படவில்லை. பல காட்சிகள் கவிதைகளாக தோன்றுகின்றன. Garage இல் வேலை செய்யும் சிறுவனிடம் விடை பெறும் பொழுது, சிறுவனின் தலையை நாயகன் தடவிக் கொடுக்கும் பொழுது, எங்கோ பார்த்த சிறுவன், நாயகன் சென்றதும் தெருமுனைவரை வந்து பார்ப்பது மனதை நெருடும் காட்சி. இவ்வாறு பல காட்சிகள், ஒளிப்பதிவு, பின்னணி இசை மிகவும் சிறப்பாக வுள்ளன. திரைப்படம் என்பது ஒரு கூட்டு முயற்சி என்பதற்கு இவர்கள் உதாரணம்.

நடிப்பு - நாயகன், நாயகி, நாயகியின் தகப்பன், சித்தப்பா, கிழவி, நாயகனின் நண்பன் ஆகியோர் மிகவும் சிறப்பாக நடித்துள்ளனர். பாலாஜி சக்திவேலிடமிருந்து நம்பிக்கையுடன் பல படங்களை எதிர்பார்க்கலாம்.

### சாதனைகள் படைத்த தமிழ்த்திரைப்பட வரலாறு

ஆசிரியர் - பிலிம் நியூஸ் ஆனந்தன்.

ஜெயலலிதாவின் சாதனைப்பட்டியலில் இந் நூலும் அடங்கும். சுமார் 700 பக்கங்கள் கொண்ட தமிழ்த் திரைப்பட வரலாறை பிலிம் நியூஸ் ஆனந்தனைக் கொண்டு எழுதி வெளியிட்டுள்ளார் ஜெயலலிதா. புத்தகத்தில் இல்லாத விடயங்களே இல்லை. உதாரணத் துக்கு தேசிய விருது பெற்ற படங்கள் அயல் நாட்டில் விருது பெற்ற படங்கள் திரை சம்பந்தப்பட்ட தபால்தலைகள், திரைப்படமான நாவல்கள், நாடகங்கள், தமிழில் வெளிவந்த அனைத்து படங்களின் பட்டியல் - நடிகர்கள்



இயக்குனர்கள், ஒளிப்பதிவாளர்கள், தயாரிப் பாளர்கள் போன்ற விரிவான விபரங்களுடன் திரைப்பட ஆர்வலர்கள் அனைவரும் கட்டாயம் வைத்திருக்க வேண்டிய நூல். கனடாவில் N.N Video, முருகன் புத்தகசாலை, காலம் செல்வம், கலைமகள் புத்தகநிலையம் போன்றோரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

### நூலில் இருந்து சில பகுதிகள்

- தேசிய விருது பெற்ற ஒரேயொரு தமிழ்ப்படம் 'மறுபக்கம்'.
- தேசிய திரைப்பட அபிவிருத்தி கழக படங்கள் (NFDC) தாகம் (1974) திக்கற்ற பார்வதி (1974) சூறாவளி (1981) கருவேலம் பூக்கள் (2000) சாசனம், இ.பி.கோ 215 (2003) நதிகரையினிலே (ஜமீலா) (2003) இனிய உதயம்.

- திரை உலகில் பெண் இயக்குனர்கள்

ஜெயதேவி - பவர் ஆப் வுமன்
அபிலாஷா - சுதா
ஸ்ரீம்பிரியா - நானே வருவேன்
சுஹாசினி - இந்திரா
சோபா சந்திரசேகர் - நண்பர்கள்

தொடர்ச்சி 22ஆம் பக்கம்


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்



Kanthan: 416.291.3997





- No Spraying
- No Smelling
- No Moving

## இசை வகுப்புக்கள்



தைப்பூசத்தை முன்னிட்டு நடந்து கொண்டிருக்கும் வாய்ப்பாட்டு, வயலின் வகுப்புக்களில் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

தொடர்புகளுக்கு:
திருமதி. தனபாலினி பரந்தாமன் (Dip. in Music)
**416.293.3568**


## உறங்குமோ காதல் நெஞ்சம்

கற்பனை என்பது கவிஞனுக்கு மட்டும் சொந்தமல்ல. வாழ்க்கையில் ஒவ்வொருவர் காணும் அனுபவங்களை சொல்லக்கேட்டும், வாசித்து அறிந்து கொள்ளும் போதும் மற்றவர்கள் எல்லோரும் அவற்றை கற்பனை செய்து மனக்கண்களில் காட்சிகளாக்க அவற்றை உணர்வு பூர்வமாக அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் ஒரு விடயத்தை கிரகித்து இலகுவாக உணரக் கூடிய வாழ்க்கையில் சொல்லக்கூடிய அல்லது எழுதக்கூடிய வல்லமை சிலருக்கே அரிதாகக் கிடைக்கின்றது. அதனால் தான் நல்ல கவிஞர்களும் எழுத்தாளர்களும் மிக சிறிய எண்ணிக்கையை காணப்படுகின்றனர்.

ஈழமண்ணின் போராட்ட சூழலினால் கருக்கப் பட்ட காதல் உறவுகளின் மனப் போராட்டங் களை எமது மனக்கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்ற வல்லமை 'உறங்குமோ காதல் நெஞ்சம்' என்ற நாவலை எமக்கு தந்த எழுத்தாளர் குரு அரவிந்தனுக்கு உண்டென்பது அண்மையில் கைக்கடக்கமாக வெளிவந்த புத்தகம் நிரூபித்துள்ளது. போராட்ட கால சூழ்நிலைகளையும் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருந்தும் குரு அரவிந்தனின் கதை சொல்லும் வல்லமை நாவல் ஆரம்பித்து முடியும்வரை வாசிப்பாளர் களை கட்டிப் போட்டு விடுகின்றது. உதயன் பத்திரிகையில் தொடராக வெளிவந்து மக்களின் பாராட்டை பெற்றபோது பத்திரிகை தொடர்ச்சியாக கைகளில் கிடைக்காமல் போனதினால் அந்த நாவலை தொடர்ச்சியாக வாசிக்க முடியாமல் போய்விட்டதே என்ற ஏக்கத்தை நிவர்த்தி செய்து விடுகின்றது. வாசித்தல் அருகி வருகின்ற இந்த காலகட்டத்தில் அதை பெருக்கும் வல்லமை இந்த நாவலுக்கு நிச்சயமாக இருக்கின்றது.

- பரம் ஜி.


# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON

# ஆசியாவின் முத்து இன்று தத்தெடுக்கப்படுகிறது




தமிழும், ஆங்கிலமும் வானொலி, தொலைக்காட்சியில் மாறி மாறிக் கேட்டது. ஆனால் உலகரும் அவரது குழாமும் அமைதியாகவே காணப்பட்டனர். சில செய்திகள் அப்பொழுது மட்டும்தான் தலைவிரித்தாடும். அடுத்த நிமிடமே இன்றைய சினிமா பாடல்கள் போல, உடனே மறைந்துவிடும். ஆனால் சில விடயங்கள் மனதில் மாறிமாறி எழுந்து கொண்டே இருக்கும். உலகரின் கண்கள் தூக்குவதுபோல இருந்தாலும் மனம் விழித்துக் கொண்டுதான் இருந்தது. 1974 ஜனவரி 10இல் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் இறந்தவர்களை இன்றுவரை மறக்கமுடிகிறதா?

1958, இனக்கலவரம், 83 இனக்கலவரம் தொடர்ந்த **நிலவரங்கள் எல்லாம் கலவரங்கள் தான்.** உலகண்ணை இன்னும் எத்தனை பேரைக் காணேல்லை. உயிரிழந்தவர்களின் கணக்கே தெரியாதாம் எண்டா செக்கண்புளோர் செல்லம்மா.

புயலுக்குப் பின் அமைதி என்பார்கள். வந்தது புயலா? பின் அமைதிபெற. இல்லை வந்தது **சுனாமி.** இது ஆரம்பம் தான். இதன் முடிவு? 'அசையும் பொருளில் இசையும் நானே. நான் அசைந்தால் அசையும் உலகமெல்லாம்'. ஆம்! சுனாமி உலகையே அசைய வைத்தது. சுனாமி - வயது பார்த்து கவரவில்லை. படித்தவர், பாமரர், சிறியவர், பெரியவர் எனப் பார்க்கவில்லை.

இனம், மொழி, மதம் பார்க்கவில்லை. சுமாத்திராவில் இருந்து புறப்பட்டு 2 மணிநேரம் பிரயாணம் செய்து பிரளயத்தை உருவாக்கியது. செக்கண்புளோர் செல்லம்மா ஆட்டிலறி அன்னம்மா ராசம்மாவும் அமைதியாக இருக்க வீட்டில் புதுவருடம் இல்லை. மனம்பொங்கும் நேரத்தில் சிறப்பான பொங்கல் இல்லை. பிறிம்லி மீனாவின் மகன், ரூபன், ரூபி தெரிந்த நண்பர்களுடன் சுனாமி நிவாரண வேலைகளுக்கு எங்கெங்கு உதவி செய்ய முடியுமோ ஆங்காங்கு சென்று வந்துகொண்டிருந்தார்கள்.

திருப்பாற் கடலில் பள்ளி கொண்டாயே ஸ்ரீமன் நாராயணா. பாம்பில் கிருஷ்ணன் பள்ளி கொண்டாராம். சுனாமி வந்தபோது தொலைக்காட்சியில் காட்டப்பட்ட காட்சிகள் பாம்பு படமெடுத்தது போலிருந்தது. காலைநேரம் காலை வணக்கம், குட்மோனிங் சொல்லி எத்தனை நிமிடங்கள் ஆகியிருக்கும். மார்கழி மாதம் மதி நிறைந்த நன்னாளில் நீராடப் போதுவீர் போதுவீரோ. திருவெம்பாவை நீராடப் போகாதவர்களையும் நீர் அமிழ்த்திவிட்டதே.

வருட முடிவென்று தான் எல்லோரும் நினைத்தவை. ஆனால் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வு முடியும் என ஒருவரும் நினைக்கவில்லை. உதவி என்றொரு சொல்லு அது கிடைக்கும் நேரத்தையும் அது செய்யப்படும் வேளையையும் வைத்துத்தான் அந்த சொல்லின் மதிப்புத் தெரிகிறது. கடல் அலை மக்களை அழித்தது. உலக மக்கள் பலரின் மனதில் மகிழ்ச்சியையும் அழிந்தது. என்ன வேண்டும் எது வேண்டும். கப்பல்கள் கடலைக் கிழித்துக்கொண்டு இலங்கையை நாட, சிறித இலங்கையில் பெரிய விமானங்கள் ஓடுபாதையில் வந்திறங்க உணவு உடை மருந்து அடேயப்பா! அப்படியிருந்தும் பாதிக்கப்பட்டவர்கள் பசியால் அழுவதும் ஆடையின்றி வாடையில் மெலிந்தும் குமுறும் குரல் எம் காதில் கேட்கிறது. கேட்டும் கேட்காமல் சிலர் இருக்கிறார்கள். அநாதைப் பிள்ளைகளைத் தான் தத்தெடுக்கச் சொல்கிறார்கள், எமது நாட்டையே தத்தெடுப்பார்கள் போலிருக்கிறார்.

ஆசியாவின் முத்து
இன்று தத்தெடுக்கப்படுகிறது.




நகைச்சுவைத் தொடர் 120
## ராசம்மா ராச்சியம்
கலகலப்பு தீசன்


## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

416 - 750 - 8118

2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough



# SRI PARADISE Catering & Take -out

416.269.4509 / 416.509.2454



292 Markham Road, Scarborough, ON

| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
|---|---|---|---|---|---|
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
|---|---|---|
| $2.99 | $1.99 | $2.99 |

### *Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# தமிழ் ஈழத்தின் எதிர்காலக் கடற்கரைக் குடியிருப்புக்கள் - கருத்தாக்கம்

## ஈழத்துப்பூராடனார் கலாநிதி க. தா. செல்வராசகோபால்

*தமிழ் ஈழத்திற்கு இலங்கையில் நீண்ட கடற்பரப்பு மட்டுமல்ல கடற்கரையும் உண்டு. இது இலங்கையின் வடமேற்குக் கரையையும் கிழக்குக் கரையையும் தெற்கில் பாணமை வரையான தென்கிழக்குக் கரை வரையும் அடக்கி உள்ளது. இது முழு இலங்கையின் கடற்கரைத் தரையின் முக்காற் பங்கு எனல் பொருந்தும். இந்தப் பெரும் பகுதியைத் தமிழ் பேசும் தமிழினத்தவர்களும் தமிழ் பேசும் இசுலாமிய இனத்தவர்களும் தமது தாயமாகக் கொண்டு வாழ்கின்றனர்.*

*அதை எதிர் காலத்தில் தமிழினம் சரிவரப் பயன்படுத்த வேண்டுமென்பதை அருட்திரு கனகரெத்தினம் போதகர் அவர்கள் புலிகளின் ஒளித் திரையிற் தோன்றி சொல்லிய செய்தி தமிழினத்தை முழுமையாக எட்ட முதலே அதனை ஒன்பதாவது கடல்கோள் செயலிற் காட்டி உணர்த்தி ஒரு பாடம் படிப்பித்துள்ளது.*

*2004 டிசம்பர் மாதம் 26ஆம் திகதி நடந்த இந்தக் கடல்கோளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் யாவும் கடற்கரையை அண்டிய பகுதிகள் ஆதலால் மீள் குடியேற்றத்தின் போது சில காரியங்களை முன் கூட்டியே எச்சரிக்கையுடன் கைக்கொள்ள வேண்டியது விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் செயற்பாடாக இருக்க வேண்டும் என்பதை தயவாகக் கேட்டுக் கொள்கிறேன். அது பற்றிய எனது அனுபவக் கருத்துக்களைக் கீழே தருகிறேன்.*

*இவ்வித கடலலைப் பாதிப்புக்களும், காலத்துக்குக் காலம் வங்கக் கடலில் உருவாகி வரும் தாழமுக்கத்தால் ஏற்படும் புயல் அனர்த்தங்களும் எதிர்காலத்தில் தமிழீழத்துக்கு ஒரு சவாலாகவே இருக்கப் போகின்றது. இது மனித முயற்சியால் தடுத்து நிறுத்த முடியாத இயற்கை நியமம். எனவே இவற்றை மேற்கொள்ள வேண்டுமானால் நெடுங்காலப் பாதுகாப்புக்குத் தக்கதான சில குடியிருப்புக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.*

*இதனை பின்வரும் மூன்று முக்கிய அம்சங்களின் கீழ் பகுத்துணரல் நலமென நம்புகிறேன்.*

*1. கடற்கரைக் குடியிருப்புக்களின் எல்லைகளை வகுத்துச் சட்ட விரோதமான குடியிருப்பு நிலத்தை பிரகடனஞ் செய்தல்.*

*2. அலைப் பெருக்கத்தாக்கத்தை எதிர்க்கும் வடிவங் கொண்ட வீடுகளின் மாதிரி ஒன்றை அறிமுகப்படுத்தல்.*

*3. அலைஉயர்வு: (அ) அவதான, (ஆ) எச்சரிப்பு கடற்கரை நிலையங்களையும், (இ) அபாய உணர்வு எச்சரிக்கைப் பரப்பு தளங்களையும் கரையோரங்களில் அமைத்தல்.*

*இதற்கான என் சிந்தனைகளை கீழே தருகின்றேன்.*

*1. கடற்கரைக் குடியிருப்புக்கு மக்களை அனுமதிக்கும் அபாயமற்ற எல்லைகளைத் தீர்மானித்தல். இத்தகைய குடியிருப்பு மீனவர்களுக்கே வழங்கப்படல் வேண்டும். இத்தகைய காணிகள் மூன்று வலயங்களாக பிரித்து அறுதி இடப்படல் வேண்டும். இந்த வலய எல்லைகள் இப்போது நடைபெற்ற பேரழிவின் தடயங்களைக் கொண்டு வகுக்கப்படலாம்.*

*1. கடலோரத் தரை 2. பேரழிவுத் தரை*
*3. கடல் சீற்றத்தின் தாக்கம் குறைந்த தரை*

*இவற்றுள் முதலாவது கடலோரத் தரைக் குடியேற்றம் முற்ற முழுதாகச் சட்ட விரோதமாக்கப்படல் வேண்டும்.*

*இரண்டாவது பேரழிவுத் தரை தக்க அழிவுத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்த பின்னரே அதற்கென வடிவமைத்த மாதிரி வீடுகளைக் கொண்ட குடியிருப்புக்களை அமைத்து குடியேற அனுமதிக்கப்படல் வேண்டும்.*

### கடலலை உயர்வு அழிவுத் தடுக்கத்தக்க கடற்கரை குடியிருப்புகளின் வீடுகளின் அமைப்பு.

*1. கடலில் இருந்து பொங்கி வரும் அலைகளின் தாக்கத்தை எதிர்க்கும் வலு*




*மூன்றாவது, கடல் சீற்றத் தாக்கங் குறைந்த தரைக் குடியிருப்பு. இங்கே அலைப் பெருக்கத்திலிருந்து பாதுகாப்புத் தேடக் கூடிய வீட்டு மாதிரிகளை உருவாக்கி அதன்படி வீடுகளைக் கட்ட அனுமதிக்க வேண்டும்.*

*எப்படியோ மக்கள் அலை அனர்த்த அபாய எச்சரிக்கையை அறிந்ததும் ஓடி ஒரு உயரமான கூரையை அடையத் தக்கதாக இடைக்கிடை மாடிகள் கொண்ட கட்டிடங்கள் இருக்க வேண்டும். இவைகள் சன சமூக நிலையங்கள், பாடசாலைகள், வைத்திய சாலைகள் போன்ற பொதுத் தாபனங்களாக இருக்கலாம். வசதி உள்ளவர்கள் இல்லம் அமைக்கும் போது இத்தகைய சிறுமாடிகளைத் தங்கள் இல்லங்க ளில் அமைத்துக் கொள்ளலாம். இத்தகைய உயர் மாடிகள் வெள்ளப் பெருக்குக்கோ அல்லது புயலழிவுக்கோ அலை உயர்வு அழிவுக்கோ புகலிடமாக அமையும். இதனால் தங்களின் பாதுகாப்புக்கும்*



தொடர்ச்சி 18ஆம் பக்கம்


# நியூ சங்கர் அன்கோ



## நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு

# விசேட மலிவு விற்பனை

## December 20, 04 தொடக்கம்

## January 20, 05 வரை

பஞ்சாபி, லங்கா சூட் - $9.99 தொடக்கம்

சாறி பிளவுஸ் - $1.49 தொடக்கம்



கலர் காப்பு வகைகள் மலிவு விலையில்
Non Stick அப்பச் சட்டி $9.99
சமையல் பாத்திரங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
கரம்போட்
சுவாமி படங்கள்
Rice Cooker
Pressure Cooker
Steamer
Roti Maker
Preethi Mixie





**Audio CD - .99¢ தொடக்கம்**
**Audio - .79¢ தொடக்கம்**

## 416.750.2370

2365 Eglinton Ave., Scarborough, ON

# உறவு முறிவும் காரணங்களும்

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

உறவு முறிவுகள், விவாகரத்துகள் சர்வசகஜமாகி விட்ட காலம் இது. உறவுமுறிவுக்குக் காரணம் அவர்தான், என மற்றவரைக் குற்றம் சாட்டுவது எளிது. ஆனால் இரு கரங்கள் தட்டாமல் ஒருபோதும் சத்தம் எழாது அல்லவா? ஆகவே இப்பிரச்சனையில் எனது பங்கு என்ன? நான் செய்த, செய்யாமல் விட்ட எதனால் இப்பிரச்சினை ஆரம்பித்தது எனப் பார்வையை உனக்குள் திருப்பி ஒரு சுய அலசல் செய்வது, பிரச்சினை வருமுன் தடுப்பது, பிரச்சினைத் தீர்விற்கு சிறந்த வழிகாட்டும். இத்தொடரில் வரும் அறிவுரைகளை வாசிப்பதுடன் நிறுத்திவிடாது உங்கள் வாழ்க்கையிலும் கையாள்வது நற்பயன் அளித்து பிரச்சினைத் தீர்விற்கு நிச்சயம் வழிவகுக்கும். அடுத்தவரை மாற்ற என்னால் முடியாது. நான் என்னை மட்டுமே மாற்றலாம். எனது சிந்தனை, சொல், செயல் மூன்றையும் மாற்றுவது, மற்றவர் இடத்திற்குப் போய் பிரச்சினையைப் பார்ப்பது இரண்டும் நிச்சயம் பிரச்சினைத் தீர்விற்கு வழி வகுக்கும். இவற்றை நன்கு உணர்ந்து தலை சிறந்த உறவொன்றினை உருவாக்கிடும் ஆயத்தங்களை இன்று நான் ஆரம்பிக்கின்றேன்.

உலகில் நல்லவராக வாழ்வது இலகுவானதாக இருக்கத் தேவையில்லை என்பதை நான் புரிந்து கொண்டதும், அன்பினை உணர்ந்து கொள்வேன். இன்ப வாழ்விற்கு அத்தியாவசியமான உறவுகள் சுலபமானவை அல்ல. நல்ல உறவைத் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமான காரியம். கையில் கிடைத்த உறவைச் சரிவரப் பேணிப் போஷித்து நீடித்து நிலைக்கப் பண்ணுவதும் சிரமமானது தான். உறவு எனும் மிக முக்கியமாக விஷயம் ஏன் இப்படி உனக்குக் கஷ்டத்தைக் கொடுக்கிறது என்ற கேள்வியை உன்னிடம் நீயே கேட்டுக்கொள்.

உன்னிடமுள்ள குறைகளைக் குணப்படுத்தும் அற்புதக் கருவிகள் உனது உறவுகள் தான் என்பது உனக்குத் தெரியுமா? இப்படி நீ சிந்திப்பதே இல்லை அல்லவா? புதிய உறவை ஆரம்பிக்கவே பயந்து கொண்டிருந்தாயே, அந்தப் பயத்தை நீக்குவது இந்த உறவு தான். உனது நிஜ ஸ்வரூபத்தை வெளிப்படுத்தாது முக மூடிக்குள் மறைந்திருந்தாயே, அந்த அச்சத்தை அழிப்பதும் இந்த உறவு தான். எதிர்மறை உணர்வுகளால் இருண்டிருக்கும் உனது உள்ளத்தை, நல்லதோர் உறவிற்கு அத்தியாவசியமான அன்பினால் நிரப்பும்போது நீயே ஒளிமயமாகி விட உனக்குள் இருப்பவை சகலதும் வெளிப்படுகின்றன. இவ்வாறு வெளிவருவனவற்றைப் பார்ப்பது இலகுவான காரியமல்ல.

எமக்கு அற்புதமான முறையில் பாடம் படிப்பிக்கும் கருவிகள் எமது உறவுகள். எமது சுயநலத்தினால் நாம் கைவிட விரும்பாது இறுக்கக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் அச்சிந்தனைகள், உணர்வுகள், அநுபவங்கள், உடமைகள் போன்றவை யாவற்றையும் எமக்கும் மற்றவர்களுக்கும் தெட்டத் தெளிவாக்குவது உறவு. உன்னிடமுள்ள சகலவற்றினதும் உண்மையான பெறுமதி என்ன என்பதை உனக்கு உறவு தவறாமல் கற்பிக்கும். உன் நிஜ ஸ்வரூபத்துடன் உன் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் எனும் நம்பிக்கையில் சில சமயங்களில் உனக்குள்ளேயே நீ அமிழ்ந்து மூழ்கிப் போய்விடும் தேவையும் இருப்பதை உனக்கு உணர்வு தெரியப்படுத்தும். ஒவ்வொரு உறவும் பிரியவேண்டிய நேரம் வரும்போது, அதைக் கைவிடுவதா, வைத்திருப்பதா என்று தீர்மானிக்க வேண்டிவரும் அல்லவா? அப்போது உனக்கு அந்த உறவு உன்னைப்பற்றிப் படிப்பித்த சகலவற்றையும் நீ கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். இது சுலபமானதல்ல. இது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பது எனக்கு நன்கு தெரியும். உளவளத்துளை (Counselling) உதவியுடன் சுய அலசலின் பின் தன் குறைகளை உணர்ந்தும், அவற்றை மாற்றுதல் எவ்வளவு சிரமமானது என்பதும் உளவளத்துறையாளராகிய எனக்கு நன்கு புரியும்.

இறைவன் எமக்குத் தரும் வரப்பிரசாதங்கள் எம் உறவுகள். தான் பெற்றெடுத்த பிள்ளை இறைவனின் ஆசீர்வாதம் என்பதை ஒவ்வொரு தாயும் நன்கு அறிவாள். குறைநிறைகளுள்ள உனது நிஜ ஸ்வரூபத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருக்கும் இன்னொருவருடன் உனது வாழ்வை அப்படியே பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினை அளிப்பது உறவு. உறவு அன்பின் வாசஸ்தலம். ஆகவே அது இறைவன் உருவாக்கிய அரண்மனை. ஆனால் துரதிஷ்டவசமாக இந்த இறைவனின் அரண்மனையை சுத்தமாக, அழகாக வைத்திருப்பது பகீரதனப்பிரயத்தனம் தான் என்பது வெட்ட வெளிச்சம்.

உன் குற்றங்குறைகளைக் குணப்படுத்திடும் வேலையைத் தான் உன் உறவுகள்



செய்கின்றன என்பதை இன்றுவரை நீ உணராது இருந்திருக்கலாம். உன்னைப் பற்றிய என்ன பாடத்தை உன் உறவுகள் உனக்குக் கற்பிக்கின்றன என்பது உனக்குப் புரியாமல் இருந்திருக்கலாம். இன்று கண்களை அகலத் திறந்து உனது சகல உறவுகளையும் நன்றாகக் கவனித்துப் பார். உன் குற்றங் குறைகளைக் குணப்படுத்தக்கூடிய உறவுகளை தேர்ந்து உன்னுடன் இறுக்கக் கட்டியணைத்துக் கொள். உன்னைப் பற்றி இன்னும் நிறைய விஷயங்களைக் நீ கற்க வேண்டியிருப்பதை அடையாளங்கண்டு ஏற்றுக் கொள்.

இன்று எனது சகல உறவுகளின் மூலமாக எனக்குக் கிடைத்திடும், என் குற்றங்குறைகளைக் குணப்படுத்தி என்னை மேம்படுத்தும் சந்தர்ப்பங்களை விசுவாசத்துடன் ஏற்று நன்றியுடன் இறைவனைப் போற்றித் துதிக்கின்றேன்.


மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617



**லலிதா புரூடி**


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 159




**இட - வல**

1. வானில் போக்கு வரத்திற்கு பயன்படுத்தும் சாதனம் ஒன்று
2. மரம்
5. நடமாடு (வல - இட)
6. தலைமுறைத் தொடர்பு
7. முழை (வல-இட)
8. கீறு
9. தலை முடி
10. காரம்
12. உயர்த்து (வல - இட)

**மேல் - கீழ்**

1. மேல் மாடம்
2. யானை
3. கோயில் ஊழியம்
4. மாலை (கீழ் - மேல்)
6. பிரி
8. மதிப்பீடு (கீழ் - மேல்)
10. மகிழ்ச்சி (கீழ் - மேல்)
11. உணவு அருந்து (கீழ் - மேல்)
12. வாய்க்கால் (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வா | ழை | ச் | சே | னை | | ப | கு |
| டி | க | | வ | சி | ய | ம் | |
| க் | | தி | க | | | ப | |
| கை | ம | ர | ம் | | அ | ர | ண் |
| | | வ | | எ | | ம் | |
| ம் | | ம் | ட | ண் | பா | | தி |
| ட | | | | | தி | ற | மை |
| ஓ | ம | ப் | பொ | டி | | | அ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் January 27, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**158இல் வெற்றி பெற்றோர்**

1) B. கௌரி, Markham
2) K. Knaratnam, Scarborough


• ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
• அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
• வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

# WAREHOUSE SALE



From
$29.99

**Jambo size & king size blankets, T Shirts, Gloves, Socks மிக குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.**





தொடர்புகளுக்கு: Deepa / Shawn

**(416) 412.6180**

**40 Nugget Ave.**
**Unit #8**
**Mccowan & Nugget**



# பக்தி கர்நாடக இசையின் பலமா அல்லது பாரமா?

இசை சிந்தனையைத் தூண்டவல்ல ஒரு சிறந்த சாதனமாகும். மகிழ்ச்சியை மட்டுமே இசை தரவல்லதென அறிந்து வைத்திருப்பவர் களுக்கு இக்கூற்று ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். புறவயமான இன்பத்திலும் மேலாக, இசை அறிவின் ஓர் ஊடகமாகவும் ஆன்ம ஈடேற்றத்தின் சாதனமாகவும், அகவயமாகப் பயன் தரவல்லது. மேலும் தியானம், முறுக்கேறிய உணர்வு களிலிருந்து தளர்ந்து விடுபடுதல், மனதில் காட்சிப் படுத்தல், மற்றும் ஞாபகசக்தி, ஒழுங்கு, ஒழுக்கம், உடலாரோக்கியம், கலாசார விழுமியங் கள் ஆகியவற்றை மேம்படுத்தல் போன்ற பல்வேறு நன்மைகளையும் அது தரக்கூடியது. குறிப்பாக தென்னிந்திய பாரம்பரிய வழிவந்த கர்நாடக இசையானது தெய்வீகத் தன்மை வாய்ந்ததாகப் போற்றப்படு கின்றது. நாதவடிவனாக சிவனையும் நாதசொரூபியாக சக்தியை யும் சைவர்கள் போற்றி வழிபட்டு வருகின்றனர். கானப் பிரியனான சிவன் இராவணனின் இசையில் மயங்கியதாக கம்பராமாயணம் கூறுகின்றது. சிவனின் கையிலுள்ள உடுக்கும் கண்ணனின் புல்லாங்குழலும் கலைமகளின் வீணையும் மற்றும் நந்தியின் மத்தளம், நாரதரின் மகதியாழ் என்பனவும் இறைவழிபாடும் இசையும் இரண்டறக் கலந்தவை எனக் காட்டுகின்றன. 'உய்ய என் உள்ளத்து ஓங்காரமாய் நின்ற மெய்யா' என மணிவாசகர் நாதவினோதனை விழிப்பதும் 'தழிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்று அப்பர் தன்னை அவரிடம் ஒப்புவிப்பதும் கர்நாடக இசையின் பக்தியின் பாற்பட்ட தன்மையைச் சுட்டிக் காட்டுகின்றன.

